சிவ வழிபாடு

சில குறிப்புகள்

(1200 சிவாலயங்களும் 1600 சிவ நாமங்களும் உள்ளடங்கியது)



தொகுத்தவர்

மேஜர் க. சீனிவாசன்

... பலர், இயக்குநர்
ஸ்ரீ அங்காளம்மன் பொறியியல் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி - 621 105.

சிவ வழிபாடு

சில குறிப்புகள்

(1200 சிவாலயங்களும் 1600 சிவநாமங்களும் உள்ளடங்கியது)



தொகுத்தவர்

மேஜர். க. சீனிவாசன்

தாளாளர், செயலர், இயக்குநர்

ஸ்ரீ அங்காளம்மன் பொறியியல் கல்லூரி,

திருச்சிராப்பள்ளி - 621 105.

முதல் பதிப்பு : ஜனவரி 2002

இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி 2002

மூன்றாம் பதிப்பு : ஜுலை 2002

நான்காம் பதிப்பு : ஆகஸ்ட் 2003

ஐந்தாம் பதிப்பு : ஏப்ரல் 2004

வெளியிடுபவர்

அறுவகை வழிபாட்டு ஆய்வு நூலகம்

சுந்தரி இல்லம், **6 (BB2)** பார்க் வியூ தெரு,

அண்ணாநகர், தென்னூர், திருச்சி – 620 017.

தொலைபேசி : (0431) 2792604, 2231511

காப்பு

காட்சிக்கு எளியர்கணங்களின் தலைவர்
வீழ்ச்சிகள் தவிர்ப்பார் தீவினைகளை களைவார்
ஆட்சிக்கு அரசர் ஆதி நாயகர்
மாட்சிமிகு விநாயகர் மலரடி வணங்குவோம்.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23வது குரு
மகாசந்நிதானம் சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளுடன்
தொகுப்பாசிரியர் மேஜர் க. சீனிவாசன்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதினம்
23-ஆவது குரு மகாசந்நிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

திருவாவடுதுறை - 609 803
(நாகை மாவட்டம்)

தொலை பேசி எண் : 04364-232021


நாள் : 28.01.2002

"நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க"

"வாழ்த்துரை"

சிவ வழிபாடு என்னும் சிறுநூல் இன்றியமையாத செய்திகள் அடங்கிய செய்திக் குறிப்புக்களை மேஜர் திரு. க. சீனிவாசன் அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். இது சிவநேயச் செல்வர்களுக்கு உரிய கையேடாகக் கொள்ளலாம். அன்பர் க. சீனிவாசன் அவர்கள் இத்தகைய முயற்சியில் மேன் மேலும் வெற்றி பெறவும் நீடுழி வாழவும் நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய அருள்மிகு ஞான மாநடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

பெறுநர் : திரு. மேஜர் க. சீனிவாசன் அவர்கள்,
தாளாளர், செயலர், இயக்குநர்,
ஸ்ரீஅங்காளம்மன் பொறியியல் கல்லூரி,
திருச்சி - 621 105.



திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தபரம்பரை
ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதீனம்
இருபத்து ஏழாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகளுடன்

தொகுப்பாசிரியர் மேஜர் க. சீனிவாசன்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரை ஸ்ரீ கந்தபரம்பரை

ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் ஆதினம்

இருபத்து ஏழாவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

சூரியனார்கோயில் - திருமங்கலக்குடி - 612 102.

தேதி : 26.04.2004

அருளாசிச்செய்தி

'சிவவழிபாடு - சில குறிப்புகள்' என்னும் பெயரில் இதற்கு முன் வெளியிடப் பெற்ற சிறிய அளவிலான நூலில் மேலும் பல அரிய பல செய்திகளை இணைத்துத் தொகுத்துப் பெரிய அளவில் ஐந்தாவது பதிப்பாக அந்நூலை எமது ஆதீன அன்பரும் சிவநெறிச் செல்வருமான மேஜர் க. சீனிவாசன் அவர்கள் வெளியிட இருப்பது அறிந்து மனம் மிக மகிழ்ச்சியடைகின்றோம்.

எழில் ஞான பூசை நெறிகளுள் ஒன்று சைவ சமயத் திருமுறை மற்றும் சித்தாந்தக் கருத்துக்களை அனைவரும் எளிமையாயப் படித்தறிந்து கொள்ளும் வகையில் நூலாய்ப் பதிப்பித்து வெளியிடுவதாகும் தற்காலத்தில் அவ்வகையான நூற் பதிப்பு முயற்சிகளை மேற்கொள்வோர் சிலராகவும், அந்நூல்களை ஆர்வமுடன் வாங்கிப் பயில்வோர் மிகமிகச் சிலராகவுமே உள்ளனர் என்பதே உண்மை நிலை.

மேலும் பக்திப் போர்வையில் வணிக நோக்கிலான பல நூல்கள் வெற்றெனத் தொகுக்கப் பெற்று புற்றீசல்கள் போல நாளும் பவனி வந்து கொண்டுள்ளன. இந்நிலையில் சைவ சமய வளர்ச்சிசி நிலை ஒன்றையே உயரிய குறிக் கோளாகக் கொண்டு கைமாறு வேண்டாக் கடம்பாடுடையவராய் மேஜர். க. சீனிவாசன் அவர்கள் தொடர்ந்து பல நூல்களை மேலும் வெளியிட்டுச் சிறக்கும் வகையில் அன்னார் பலவகை நலன்களையும் பாங்குடன் பெற்றுப் பல்லாண்டுகள் சிறந்து வாழ எம் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஞானப்பூங்கோதை உடனாய ஸ்ரீ காளத்திநாதர் திருவடி மலர்களைச் சிந்தித்து ஆசிர்வதிக்கின்றோம்.

(குருவருளாணையின் வண்ணம்)

சிவ வழிபாடு

(சில குறிப்புகள்)

பொருளடக்கம்

ஐந்தாம் பதிப்பிற்கு
முன்னுரை

கி.பி. 2001ல் குருபூசை விழாவில் ஒன்பதாம் நாள் நிகழ்ச்சியில் பங்கேற்குமாறு திருவாவடுதுறை குருமகா சன்னிதானம் அவர்கள் பணித்திருந்தனர். அந்த விழாவிற்கு சென்ற நான் சிவவழிபாடு பற்றிய சில குறிப்புகளை தொகுத்து 20 பக்க அளவில் ஒரு சிறு கையேட்டினை அன்பர்களுக்கு வழங்கினேன். குருமகா சன்னிதானம் அவர்களும் 'இந்த தொகுப்பு பயனுள்ளதாக இருக்கும். இது போன்ற ஆன்மீகப்பணியை தொடருங்கள்' என்று நல்லாசிகள் வழங்கினார்.

அந்த பிரதிகளை பாடல் பெற்ற தலங்களுக்கும் மற்றைய ஆதீனங்களுக்கும் அனுப்பினேன். பல தலங்களிலிருந்தும் அந்த தொகுப்புக்கு பாராட்டுகள் கிடைத்தன. மதுரை ஆதீனம் குருமகாசன்னிதானம், காமாட்சிபுரம் குருமகா சன்னிதானம், செங்கோல் ஆதீனம் குருமகா சன்னிதானம், பேரூர் ஆதீனம் குருமகா சன்னிதானம், ஊரன் அடிகள், திருக்குறள் பீடம் குருசந்நிதானம் ஆகியோர், ஊக்குவித்து நல்லாசிகள் வழங்கினர்.

குறைகள் கண்ட அன்பர்கள் நிறைவு செய்யும் நல்வழிகளை எடுத்துக்காட்டினர். எனவே 3,4 பதிப்புகளை சற்று விரிவாக்கி 80 பக்க அளவில் **'சிவவழிபாடு - சில குறிப்புகள்'** என்ற தொகுப்பினை வழிபாட்டு மன்றங்களுக்கும், மற்றைய சிவாலயங்களுக்கும் அனுப்பினேன். சிவ வழிபாடு, பிள்ளையார் வழிபாடு, கந்தன் வழிபாடு, அம்பாள் வழிபாடு, திருவிளக்கு வழிபாடு, திருமால் வழிபாடு என ஆறு தொகுப்புகள் இறையருளால் வெளிவந்தன.

சிவநேயச் செல்வர்களிடமிருந்து மிகுந்த ஆதரவு கிடைத்தது. திருச்சி வேளாளர் சங்கம் **'பொறியியல் ஞானி'** என்ற விருதும், காமாட்சிபுரி ஆதீனம் **'ஷண்மத போதகர்'** என்ற விருதும் தந்து சிறப்பித்தனர். ஞானமணி, துக்ளக், இராமகிருஷ்ண விஜயம், அருள் பூமி, ஓம் சரவணபவ, சிவசிவ, உழ வாரம் ஆகிய ஆன்மீக இதழ்களிலும் ஆதரவான விமர்சனங்கள் தந்தனர்.

சிவனருட் செல்வர்கள் பலரது வேண்டுகோளுக்கிணங்கி சிவாலயங்கள் பற்றிய செய்திகளையும் இணைத்து 300 பக்க அளவில் ஐந்தாவது பதிப்பு அச்சாகி வெளி வருகிறது. இப்பணி இனிது தொடர எல்லாம் வல்ல இறைவன் அருளை நாடும்

மேஜர் க. சீனிவாசன்

சிந்தனை அமுது

- ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
- நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
- பக்க நின்றார் அறியா பரமனை
- யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
- உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே
- அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே
- அஞ்சும் அடக்கடக் கென்பர் அறிவிலார்
- சாத்திரத்துக்கு திருமந்திரம் தோத்திரத்திற்கு திருவாச்சகம்
- ஆறறிவு ஓரறிவை வணங்குகிறது
- விழுந்து எழுந்தவரே ஞானம் பெற்றவர்
  விழும்போது அனுபவம் எழும்போது ஞானம்
- ஆத்ம ஞானம் வரும்போது அழகு
  அஞ்ஞான இருள் போகும் போது அழகு

நோக்கம்

சிவ வழிபாடு மிகத்தொன்மையானது. ஆதிசங்கரர் வரையறுத்த சைவம், வைணவம், கௌமாரம், காணாபத்யம், சௌரம், சாக்தம் ஆகிய அறுவகை வழிபாடுகளில் (ஷண்மதஸ்தாபனம்) சைவம் மிகவும் விரிவானது, ஆழமானது.

தொல்காப்பியம் முதலாக சிவ வழிபாடு பற்றிய சான்றுகள் உள்ளன.

சிவ வழிபாடு என்னும் போது சைவத்தை வளர்த்த சான்றோர்கள் - நமது முன்னோர்கள் விட்டுச்சென்ற சிவநெறி கூறும் நூல்கள் - அவர்கள் பெருங்கருணையுடன் கட்டிவைத்த ஆலயங்கள்-அமைத்த ஆதீனங்கள், நிறுவிய மடங்கள், செயல்படும் வழிபாட்டு மன்றங்கள் ஆகிய நம் கண்முன் நிற்கின்றன.

நாயன்மார்கள், சித்தர்கள், சமயக்குரவர்கள், சந்தான குரவர்கள், ஞானிகள், யோகிகள், மகான்கள், புலவர்கள் பலர் நன்னெறிகளால் வாழ்ந்து காட்டியும், அரிய நூல்களை அருளியும் சைவத்தை வளர்த்து வந்தனர். சந்தானக்குரவர்களது முயற்சியால் ஆதீனங்களும், மடங்களும் தோன்றின. மன்னர்களது ஆதரவாலும் மக்களது அயராத உழைப்பாலும் பல்லாயிரக்கணக்கான சிவாலயங்கள் எழுந்தன. வழிபாட்டு மன்றங்கள் வளர்ந்தன.

சைவம் பல உட் பிரிவுகளைக் கொண்டிருந்தாலும் சிவனைப் பற்றிய சிந்தனை, நம்பிக்கை, வழிபாடு இன்றும் தொடர்கின்றது. பௌத்தம், சமணம், வைணவம் ஆகிய தத்துவங்களுடன் போராடி வெற்றி கண்டுள்ளது வரலாறு கண்ட செய்தியே.

இந்த தொகுப்பின் நோக்கமாவது - சிவ வழிபாடு பற்றிய செய்திகளை பழம் பெரும் நூல்களிலிருந்தும் ஆலயங்களிலிருந்தும் எடுத்து தொகுத்து வழங்குதலும், சிவாலயங்களுக்கு சென்று வழிபாடு செய்ய விரும்பும் அடியார்களுக்கு வழிகாட்டிதலும் ஆகும்.


5. சைவம் வளர்த்த சான்றோர்

5 (i) செய்திகள்

நந்தி அருள் பெற்ற நாதர் (8) - நாயன்மார்கள் (63) - தொகையடியார்கள் (9) - பதினெண் சித்தர் (18) - பன்னிரு திருமுறை தந்தவர் (27) - சமயக்குரவரும் (4) சந்தானக்குரவரும் (4) - சைவ நூல்கள் அருளிய சான்றோர் (20) - சைவ ஆதீனங்கள் (18) - மடங்கள் (15) - இதர ஆன்மீக நிறுவனங்கள் சில - வழிபாட்டு மன்றங்கள் சில.

5 (ii) ஆதார நூல்கள்

1. ஊரன் அடிகள்	- சைவ ஆதீனங்கள்
2. வானதி திருநாவுக்கரசு	- சித்தர் பாடல்கள்
3. கோவேந்தர்	- சித்தர் பாடல்கள்
4. 27 ஆசிரியர்கள்	- பன்னிரு திருமுறைகள்.
5. சந்தானக் குரவர்	- மெய்கண்ட நூல்கள்
6. ஆசிரியர்	- 'சிவ சிவ' திங்கழிதழ்



5.1 நந்தி அருள் பெற்ற நாதர் (8)

சனகர்	சிவயோக மாமுனி
சனந்தனர்	பதஞ்சலி
சனாதனர்	வியாக்ரமர்
சனற்குமாரர்	திருமூலர்

5.2 நாயன்மார்கள் (63)

'சைவசமயமே சமயம்' எனக்கொண்டு சைவத்தின் பெருமையை நிலைநாட்டியவர்களே அறுபத்து மூவர் எனப்படும் நாயன்மார்கள். நாயன்மார்களது நெறியான வாழ்க்கையை சுவையாகக் கூறுவதே சேக்கிழாரின் பெரியபுராணம். எனவே இது திருமுறைகளில் பன்னிரண்டாவது இடம் பெற்றுள்ளது. நாயன்மார்கள் பற்றிய சில குறிப்புகள் காண்போம்.

1. அதிபத்தர் - மீன் பிடிப்பவர் - ஆவணி - ஆயில்யம் - சோழநாடு நாகபட்டினம் - நவரத்தின மிழைத்த பொன்மீனை தாம் வைத்துக் கொள்ளாமல் சிவார்ப்பணம் செய்தவர்.

2. அப்பூதி அடிகள் - அந்தணர் - தை - சதயம் - சோழநாடு - திங்களூர் - பிள்ளை இறந்ததையும் மறைத்து திருநாவுக்கரசருக்கு அமுது அளித்தவர்.

3. அமர் நீதியார் - வணிகர் - ஆனி - பூரம் - சோழநாடு - பழையாறை - கோவணத்துக்கு இணையாக மனைவி மக்கள் சொத்து தம்மையும் சிவனடியாருக்கு தந்தவர்.

4. அரிவாட்டாயர் - வேளாளர் - தை - திருவாதிரை - சோழநாடு - கணமங்கலம் - சிவநிவேதனுத்துக்குரிய பொருள் சிந்தியதற்காகத் தமது கழுத்தையரிந்தவர்.

5. ஆனாய நாயனார் - இடையர் - கார்த்திகை - ஹஸ்தம் - மழநாடு - மங்கலவூர் - பசுமேய்க்கும் போது ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் அமைத்து வாசித்தவர்.

6. இசைஞானியார் - ஆதி சைவர் - சித்திரை - நடுநாடு - திருநாவலூர் - சுந்தரமூர்த்தி நாயனாரைப் பிள்ளையாகப் பெற்று வளர்த்த பெண்மணியார்.

7. இடங்கழி ந்ர்யனார் - அரசர் - ஐப்பசி - கிருத்திகை - கோனாடு - கொடும்பாளூர் - அடியார் வழிபாடு செய்ய நெல் திருடினவர்க்கு மேலும் பொருளும் நெல்லும் தந்தவர்.

8. இயற்பகை நாயனார் - வணிகர் - மார்கழி - உத்திரம் - சோழநாடு - காவிரிப் பூம்பட்டினம் - சிவனடியாருக்கு தம் மனைவியையே தானமாக கொடுத்தவர்.

9. இளையான் குடி மாற நாயனார் - வேளாளர் - ஆவணி - மகம் - இளையான்குடி - விதைத்த நெல்லெடுத்து வீட்டின் அலக்கெரித்து அடியார்க்கு அமுது அளித்தவர்.

10. உருத்திர பசுபதி நாயனார் - அந்தணர் - புரட்டாசி - அசுவினி - சோழநாடு - திருத்தலையூர் - அல்லும் பகலும் திருக்குளத்தில் கழுத்தளவில் நின்று ஸ்ரீருத்திர மந்திரம் ஜெபித்தவர்.

11. எறிபத்த `நாயனார் - வேளாளர் - மாசி - ஹஸ்தம் - சோழநாடு - கருவூர் - பூக்குடலையை சிவனடியாரிடமிருந்து பிடித்திழுத்த யானையை வெட்டியவர்.

12. ஏயர்கோன் கலிக்காம நாயனார் - வேளாளர் - ஆனி - ரேவதி - சோழநாடு - திருப்பெருமங்கலம் - சிவபெருமானைத் தூதாக அனுப்பிய வன்தொண்டரை இகழ்ந்து பின் இறைவன் அருளால் நண்பரானவர்.

13. ஏனாதி நாய நாயனார் - சான்றார் - புரட்டாசி - உத்திராடம் - சோழநாடு - எயிளனூர் - பகைவன் நெற்றியில் திருநீற்றைக் கண்டதும் அவன் தன்னைக் கொல்ல அனுமதிக்கிறார்.

14. ஐயடிகள் காடவர்கோன் - அரசர் - ஐப்பசி - மூலம் - தொண்டை நாடு - காஞ்சீபுரம் - பதவியை துறந்து தவம் மேற்கொண்டு க்ஷேத்திர வெண்பாவினால் நிலயாமை விளக்கியவர்.

15. கணநாதர் - அந்தணர் - பங்குனி - திருவாதிரை - சோழநாடு - சீர்காழி - திருஞான சம்பந்தரை வழிபட்டு சரியைத் தொண்டருக்கு பயிற்சி தந்தவர்.

16. கணம்புல்ல நாயனார் - அந்தணர் - கார்த்திகை - கிருத்திகை - இருக்குவேளூர் - புல்லிற்று நெய் கொண்டு திருவிளக்கு எரித்தவர். நெய்யின்மையால் தன் தலைமுடியை எரித்தவர்.

17. கண்ணப்ப நாயனார் - வேடர் - தை - மிருக சிரீஷம் - தொண்டைநாடு - உடுப்பூர் - ஆறே நாட்களில் அளவுகடந்த பக்தியை காட்டி காளத்தியப்பருக்கு கண் கொடுத்தவர்.

18. கலிக்கம்பர் - வணிகர் - தை - ரேவதி - நடுநாடு - பெண்ணாகடம் - தமது வேலையாள் சிவனடியாராக வந்த போது தாம் அவனை வழிபட்டதோடு, வழிபடாத தமது மனைவியின் கையை வெட்டியவர்.

19. கலிய நாயனார் - செக்கார் - ஆடி - கேட்டை - தொண்டைநாடு - திருவொற்றியூர் - திருவிளக்குக்கு எண்ணெய் இல்லாதபோது தனது இரத்தங்கொண்டு எரிக்க முயன்றவர்.

20. கழற்றறிவார் - அரசர் - ஆடி - சுவாதி - மலைநாடு - கொடுங்கோளூர் - நடராஜர் பாத சிலம்பொலி கேட்க முயன்று சுந்தரருக்கு நண்பராகி, சிவபெருமானின் திருமுகப்பாசுரம் பெற்று கயிலை சென்று ஞான உலா பாடியவர்.

21. கழற்சிங்கர் - அரசர் - வைகாசி - பரணி - சிவபூசைக்குரிய பூவை மோந்த போது தன் மனைவியின் மூக்கை ஒரு சிவனடியார் அறுக்க தான் அவளது கையை துண்டித்து தண்டித்தவர்.

22. காரியார் - அரசர் - மாசி - பூராடம் - சோழநாடு - திருக்கடவூர் - கோவை பாடி பொருள் ஈட்டி ஆலயப் பணி செய்தவர்.

23. காரைக்கால் அம்மையார் - வணிகர் - பங்குனி - சுவாதி - சோழநாடு - காரைக்கால் - சிவபெருமானை வேண்டி மாம்பழமும் பேய் உருவமும் பெற்று ஆலங்காட்டில் ஆடல் கண்டு தலையால் நடந்தவர்.

24. குங்கிலியக்கலையர் - அந்தணர் - ஆவணி - மூலம் - சோழநாடு - திருக்கடவூர் - மனைவியின் தாலியை விற்று குங்கிலியம் வாங்கியவர், சாய்ந்த இலிங்கத்தை கழுத்தில் பூமாலை கொண்டு நிமிர்த்தியவர்.

25. குலச்சிறையார் - கணக்கர் - ஆவணி - அனுஷம் - பாண்டியநாடு - மணமேற்குடி - அரசன் சமணராக இருந்தும் தாம் சிவனடியாரை வழிபட்டு பின் திருஞான சம்பந்தர் மூலம் எல்லோரையும் சைவம் ஆக்கினவர்.

26. கூற்றுவர் - அரசர் - ஆடி - திருவாதிரை - களந்தை - தில்லைவாழ் அந்தணர் முடிசூட்ட மறுக்கவே தில்லை நடராஜர் திருவடிகளே முடியாக சூட்டப்பெற்றவர்.

27. கோச்செங்கட் சோழர் - அரசர் - மாசி - சதயம் - சோழநாடு - எழுபது சிவாலயங்கள் கட்டினவர், முற்பிறவியில் சிலந்தியாக சிவபூசை செய்தவர்.

28. கோட்புலியார் - வேளாளர் - ஆடி - கேட்டை - சோழநாடு - திருநாட்டியத்தான்குடி - இரண்டு புதல்வியரை சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு அர்ப்பணம் செய்தார். சிவபூசைக்குரிய நெல்லை உண்டவரைக் கொன்றார்.

29. சடையனார் - ஆதிசைவர் - மார்கழி - திருவாதிரை - நடுநாடு - திருநாவலூர் - சுந்தர மூர்த்தி சுவாமிகளுக்கு தந்தையானவர், சடங்கவி சிவாச்சாரியார் புதல்வியை மகனுக்கு திருமணம் செய்விக்க முயன்றவர்.

30. சண்டேசுரர் - அந்தணர் - தை - உத்திரம் - சோழநாடு - திருச்சேய்ஞலூர் - அபிஷேகப் பால் குடத்தை இடறிய தந்தையின் கால்களை வெட்டியவர்.

31. சத்தி நாயனார் - வேளாளர் - ஐப்பசி - பூசம் - சோழநாடு - வரிஞ்சியூர் - சிவனடியார்களை குறை கூறுபவரின் நாக்கை அறுத்தவர்.

32. சாக்கிய நாயனார் - வேளாளர் - மார்கழி - பூராடம் - திருச்சங்கமங்கை - மறவாது தினமும் சிவன்மீது கல் வீசியவர்.

33. சிறப்புலியார் - அந்தணர் - கார்த்திகை - பூராடம் - சோழநாடு - திரு ஆக்கூர் - அடியார்களுக்கு அமுதும் பொருளும் தந்தவர்.

34. சிறுத்தொண்டர் - மாமாத்திர பிராமணர் - சித்திரை - பரணி - சோழநாடு - திருச்செங்காட்டங்குடி - வாதாபி போரில் வென்று, சிவனடியாருக்கு தமது ஒரே பிள்ளையை கறியாக சமைத்து படைத்தவர்.

35. சுந்தரமூர்த்தி நாயனார் - ஆதிசைவர் - ஆடி - சுவாதி - நடுநாடு - திருநாவலூர் - இறைவனை தூதுவிட்டவர், முதலையுண்ட பிள்ளையை வருவித்தவர், தேவாரம் பாடியவர்.

36. செருத்துணை நாயனார் - வேளாளர் - ஆவணி - பூசம் - சோழநாடு - தஞ்சாவூர் - சிவபூசைக்குரிய பூவை முகர்ந்த கழற் சிங்கரின் மனைவியின் மூக்கை அறுத்தவர்.

37. சோமாசி மாற நாயனார் - அந்தணர் - வைகாசி - ஆயில்யம் - சோழநாடு - திருஅம்பர் - வேதவேள்வி செய்து சுந்தரமூர்த்தி நாயனாரை வழிபட்டவர்.

38. தண்டியடிகள் - அந்தணர் - பங்குனி - சதயம் - சோழநாடு - திருவாரூர் - பிறவிக் குருடராக இருந்தாலும் திருக்குளப் பணி செய்து குருடு நீங்கியவர், சமணரை வென்றவர்.

39. திருக்குறிப்புத் தொண்டர் - ஏகாலியர் - சித்திரை - சுவாதி - தொண்டைநாடு - காஞ்சிபுரம் - சிவனடியாருக்கு வாக்களித்தபடி அவர் துணியை துவைத்து உலர்த்த இயலாது போகவே தமது தலையை கல்லில் மோதிக் கொண்டவர்.

40. திருஞான சம்பந்தர் - அந்தணர் - வைகாசி - மூலம் - சோழநாடு - சீர்காழி - உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டு தேவாரம் பாடியவர், எலும்பைப் பெண்ணாக்குதல் முதல் பல அற்புதங்கள் செய்தவர்.

41. திருநாவுக்கரசர் - வேளாளர் - சித்திரை - சதயம் - நடுநாடு - திருவாமூர் - தேவாரங்கள் பாடியவர், நமசிவாய என்று ஒலித்தவர், கருங்கல்லில் கடலில் மிதந்தவர், உழவாரப் பணியால் உயர்வு பெற்றவர்.

42. திருநாளைப் போவார் - புலையர் - புரட்டாசி - ரோகினி - சோழநாடு - ஆதனூர் - சிதம்பர தரிசனத்திற்காக ஏங்கி பின் தீப்புகுந்து முனிவராகி அம்பலவாணன் முன்பு மறைந்தவர்.

43. திருநீலகண்டர் - குயவர் - தை - விசாகம் - சோழநாடு - சிதம்பரம் - மனைவியின் சபதத்திற்கு உடன்பட்டு அவளைத் தீண்டாது இளமையிலும் முதுமையிலும் இல்லறம் நடத்திப்பின் இறையருளால் இளமை பெற்றவர்.

44. திருநீலகண்ட யாழ்ப்பாணர் - பாணர் - வைகாசி - மூலம் - நடுநாடு - திரு எருக்கத்தம் புலியூர் - திருஞான சம்பந்தருடன் சென்று யாழ் இசைத்து சிவதொண்டு செய்தவர்.

45. திருநீலநக்கர் - அந்தணர் - வைகாசி - மூலம் - சோழநாடு - சாத்தமங்கை - அன்போடு சிவலிங்கத்தை ஊதித் துதித்தவர், பாணர்க்கு வேதிகையில் இடம் தந்தவர், திருஞான சம்பந்தருக்கு திருமணத்தை நடத்தி முத்தி பெற்றவர்.

46. திருமூலர் - இடையர் - ஐப்பசி - அசுவினி - சோழநாடு - சாத்தனூர் - மூலன் உடலில் புகுந்து மூவாயிரம் ஆண்டிருந்து திருமந்திரம் அருளியவர்.

47. நமி நந்தியடிகள் - அந்தணர் - வைகாசி - பூசம் - சோழநாடு - ஏமப் பேரூர் - தண்ணீரால் விளக்கெரித்தவர், திருவாரூரில் பிறந்தவரையெல்லாம் சிவரூபாகக் கண்டவர்.

48. நரசிங்க முனையரையார் - குறுநில மன்னர் - புரட்டாசி - சதயம் - நடுநாடு - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வளர்த்தவர், சிவவேடம் பூண்ட எல்லோரையும் வழிபட்டவர்.

49. நின்றசீர் நெடுமாறர் - அரசர் - ஐப்பசி - பரணி - பாண்டியநாடு - மதுரை - திருஞான சம்பந்தர் தந்த திருநீற்றால் சுரம் நீங்கி கூன் நீங்கி சைவர் ஆனவர்.

50. நேசர் - சாலியர் - பங்குனி - ரோகிணி - காம்பீலி நகரம் - சிவனடியார்க்கு உடை வழங்கியவர்.

51. புகழ்ச்சோழர் - அரசர் - ஆடி - கிருத்திகை - சோழநாடு - உறையூர் - பகைவனது அறுபட்ட தலையில் சிவசின்னமான சடை கண்டு அஞ்சி உயிர் விட்டவர்.

52. புகழ்த்துணையர் - ஆதி சைவர் - ஆவணி - ஆயில்யம் - செருவிலிபுத்தூர் - சிவபூசைக்குதவியாக பஞ்ச காலத்தில் இறைவனிடம் காசு பெற்றவர்.

53. பூசலார் - அந்தணர் - ஐப்பசி - அனுஷம் - தொண்டை நாடு - திருநின்றவூர் - மனதாலேயே கோயில் கட்ட சிவவழிபாடு செய்தவர்.

54. பெருமிழலைக்குறும்பர் - குறும்பர் - ஆடி - சித்திரை - பெருமிழலையூர் - சுந்தரமூர்த்தி சுவாமிகளை வழிபட்டு அவர் கயிலை செல்லும் போது யோகத்தால் தாமும் கயிலை சென்றார்.

55. மங்கையற்கரசியார் - அரசர் - சித்திரை - ரோகிணி - பாண்டியநாடு - திருஞான சம்பந்தரை வரவழைத்து தமது கணவரையும் நாட்டையும் சைவமாக்கியவர்.

56. மானக்கஞ்சாறர் - வேளாளர் - மார்கழி - சுவாதி - கஞ்சானூர்- கலியாணம் தொடங்கும் போது மணப் பெண்ணான தனது மகளின் முடியை அறுத்து சிவனடியாருக்கு தந்தவர்.

57. முருகர் - அந்தணர் - வைகாசி - மூலம் - சோழநாடு - திருப்புகலூர் - நந்தவனத்திலிருந்து பூவெடுத்து மாலை தொடுத்து சிவதொண்டு செய்து திருஞான சம்பந்தர் திருமணத்தில் முத்தி பெற்றவர்.

58. முனையாடுவார் - வேளாளர் - பங்குனி - பூசம் - சோழநாடு - திருநீடூர் - கூலிக்கு போர் செய்து அந்த கூலிப்பணத்தால் சிவனடியாரை வழிபட்டவர்.

59. மூர்க்கர் - வேளாளர் - கார்த்திகை - மூலம் - தொண்டைநாடு - திருவேற்காடு - சூதாட்டத்தில் கிடைத்த இலாபம் கொண்டு சிவனடியாரை வழிபட்டவர்.

60. மூர்த்தி - வணிகர் - ஆடி - கிருத்திகை - பாண்டிய நாடு - மதுரை - சந்தனம் தருகிற பணியில் தட்டுப்பாடு ஏற்படவே முழங்கையை அரைத்தவர், திருநீறு உறுத்திராக்கம் சடைமுடி ஆகிய மும்மையால் உலகை ஆண்டவர்.

61. மெய்ப் பொருளார் - அரசர் - கார்த்திகை - உத்திரம் - நடுநாடு - திருக்கோயிலூர் - வஞ்சித்து தம்மைக் கொல்ல வந்த சிவ வேடதாரியைக் காப்பாற்றித் தாம் உயிர் விட்டவர்.

62. வாயிலார் - வேளாளர் - மார்கழி - ரேவதி - தொண்டை நாடு - மயிலாப்பூர் - மானச ஞான பூசை செய்து முத்தி பெற்றவர்.

63. விறன்மிண்டர் - வேளாளர் - சித்திரை - திருவாதிரை - மலைநாடு - செங்குன்றூர் - சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகை பாட காரணமாக இருந்தவர்.

(குறிப்பு : அறுபத்து மூவர் வரலாறு காண சேக்கிழாரின் பெரிய புராணம் - 12வது திருமுறை - படிக்கவும். பெரிய புராணத்திற்கு திரு.வி.க. மா. பாலசுப்ரமணிய முதலியார், பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன், கவிஞர் வ.த. இராம சுப்பிரமணியம், காசித்திருமடம், ஆகியோர் உரை எழுத்தியுள்ளனர்).

5.3 தொகை அடியார்கள் - 9

அறுபத்தி மூவருள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருத்தொண்டத் தொகையில் இவ்வறுபத்து மூவரோடு ஒன்பது தொகையடியார் கூட்டங்களையும் பாடியுள்ளார்.

1. தில்லை வாழ் அந்தணர்.
2. பொய்யடிமையில்லாத புலவர்.
3. பத்தராயப் பணிவார்.
4. பரமனையே பாடுவார்.
5. சித்தத்தை சிவன்பால் வைத்தார்.
6. திருவாரூர்ப் பிறந்தார்.
7. முப்போதும் திருமேனி தீண்டுவார்.
8. முழுநீறு பூசிய முனிவர்.
9. அப்பாலும் அடிச்சார்ந்தார்.

5.4 பதினெண் சித்தர் - 18

நந்தி அகத்தியர், மூலர், புண்ணாக்கீசர்
நற்றவத்துப் புலத்தியரும், பூனைக்கண்ணர்
நந்தியிடைக் காடரும், போகர், புலிக்கையீசர்
கருவூரார், கொங்கணவர், காலாஞ்சி
சிந்தி எழுகண்ணர், அகப்பேயர், பாம்பாட்டி
தேரையரும் குதம்பையரும் சட்டைநாதர்
செந்தமிழ் சேர் சித்தர் பதினெண்மர் பாதம்
சிந்தை யுன்னிச் சிரத்தணியாய்ச் சேர்த்தி வாழ்வாம்.

	பெயர்	மரபு	வாழ்ந்த தலம்
1.	நந்தி	பிராமணர்	காசி
2.	அகத்தியர்	வேளாளர்	அனந்தசயனம்
3.	திருமூலர்	வேளாளர்	திருவாவடுதுறை
4.	புண்ணாக்கீசர்	கன்னட இடையர்	நாங்குநேரி
5.	புலஸ்தியர்	சிங்களவர்	ஆவுடையார் கோயில்
6.	பூனைக்கண்ணர்	எகிப்தியர்	எகிப்து
7.	இடைக்காடர்	இடையர்	திருவண்ணாமலை
8.	போகர்	பொற்கொல்லர்	பழனி
9.	புலிக்கையீசர்	கள்ளர்	இராமேசுரம்
10.	கருவூரார்	கன்னாரர்	கருவூர்
11.	கொங்கணவர்	கன்னட இடையர்	திருப்பதி
12.	காளாங்கிநாதர்	சிற்பி	காஞ்சிபுரம்
13.	எழுகண்ணர்	சீனத்து ஆசாரி	அழகர்மலை
14.	அகப்பேயர்	வேளாளர்	அழகர்மலை
15.	பாம்பாட்டி	ஜோகி	விருத்தசலம்
16.	தேரையர்	பிராமணர்	பொதிகைமலை
17.	குதம்பை	இடையர்	மாயூரம்
18.	சட்ட நாதர்	சிங்களவர்	திருவரங்கம்

இதர சித்தர்கள் :

கமலமுனி, கோரக்கர், சுந்தரானந்தர், தன்வந்திரி, மச்சமுனி, வாமதேவர், வான்மீகர், பட்டினத்தார், பத்திரகிரியார், சிவவாக்கியர், கடுவெளி, பீருமுகம்மது, வாலைசாமி, சேஷயோகி, திருவள்ளுவர், கணபதிதாசர், ரோமரிஷி, சுப்ரமணியர், ராமதேவர், காகபுஜண்டர், சூரியானந்தர், பூரணானந்தர், இராமலிங்கர், பூகண்டம், வியாசர், வான்மீகி, சோதிமுனி, டமரகர், வரரிஷி, அறிவானந்தர், ஜமதக்னி, சண்டேசர், தாயுமானவர், வல்லவர் இதர சிலர்.

5.5 பன்னிரு திருமுறைகள் - 27 தந்த இருபத்து எழுவர்

1.	திருஞானசம்பந்தர்	தேவாரம்	(1,2,3)
2.	திருநாவுக்கரசர்	தேவாரம்	(4,5,6)
3.	சுந்தரர்	தேவாரம்	(7)
4.	மாணிக்கவாசகர்	திருவாசகம், திருக்கோவையார்	(8)
5.	திருமாளிகைத்தேவர்	- திருவிசைப்பா	(9)
6.	சேந்தனார்	"	
7.	கருவூர்த்தேவர்	"	
8.	பூந்துருத்தி நம்பிகாட நம்பி	"	
9.	கண்டராதித்தர்	"	
10.	வேணாட்டிகள்	"	
11.	திருவாலியமுதனார்	"	
12.	புருடோத்தமநம்பி	"	
13.	சேதிராசர்	- திருப்பல்லாண்டு	(9)
14.	திருமூலர்	- திருமந்திரம்	(10)

15. திரு ஆலவாய் உடையார்
16. காரைக்கால் அம்மையார்
17. ஐயடிகள் காடவர் கோன் நாயனர்
18. சேரமான் பெருமாள் நாயனார்
19. நக்கீரதேவர்
20. கல்லாட தேவர்
21. கபில தேவர்
22. பரண தேவர்
23. இளம்பெரும் அடிகள்
24. அதிராவடிகள்
25. பட்டிணத்து பிள்ளையார்
26. நம்பி ஆண்டார் நம்பி

திருமுகப்பாசுரம் முதல் திருநாவுக்கரசர் (11) திரு ஏகாதசமாலை முடிய நாற்பது நூல்கள்

27. சேக்கிழார் - பெரியபுராணம் (12)

குறிப்பு : தேவாரம் அருளிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர் ஆகிய வரை மூவர் எனவும், சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய சமயக்குரவரை நால்வர் எனவும் சைவ பரம்பறை அன்போடு அழைக்கும்.



5.6 சமயக்குரவரும் சந்தானக் குரவரும்

சமயக்குரவர்		சந்தானக்குரவர்	
1.	நால்வராவது : திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்திகள் மாணிக்கவாசகர்	1.	நால்வராவது : மெய் கண்டார், அருணந்தி சிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம்
2.	நால்வரும் தனித்தனி ஆச்சாரியர்கள்	2.	ஒருவருக்கொருவர் சீடர்
3.	தோத்திரங்கள் அருள திருமுறைகள் தோன்றின (1 முதல் 7 வரை).	3.	சாத்திரங்கள் அருள சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றின (14 சாத்திரங்கள்)
4.	கோயில்கள் விளக்கம் பெற்றன.	4.	மடங்கள் / ஆதீனங்கள் தோன்றின
5.	கோயில்களில் இறைவன் முன்பாடுவர்	5.	மடங்களில், சமயநெறி பயிற்றுவிக்கப் படுகின்றன.
6.	நின்ற கோலத்தில் விளங்குவர்.	6.	அமர்ந்த கோலத்தில் விளங்குவர்.
7.	சைவம் வளர்ந்தது.	7.	சைவ சித்தாந்தம் நிலை பெற்றது.
8.	இவர்கள் சமயாச்சாரியார் கள். (Religion)	8.	இவர்கள் மதாச்சாரியார் கள். (Philosophy)
9.	சீட பரம்பரை இல்லை.	9.	சீட பரம்பரை உண்டு.

5.7 சைவ நூல்கள் அருளிய சான்றோர்

1. ஔவையார்
2. சிவப்பிரகாச சாமிகள்
3. தாயுமான சாமிகள்
4. குமரகுருபரசாமிகள்
5. கச்சியப்ப சிவாச்சாரியார்
6. கச்சியப்ப முனிவர்
7. மாதவ சிவஞான முனிவர்
8. சாந்தலிங்க சாமிகள்
9. பரஞ்சோதி முனிவர்
10. சிதம்பர சாமிகள்
11. சிற்றம்பல அடிகள்
12. வாகீச முனிவர்
13. சம்பந்த முனிவர்
14. அருணகிரிநாதர்
15. அருட்பிரகாச வள்ளலார்
16. அபிராமி பட்டர்
17. ஆறுமுகநாவலர்
18. பாம்பன் சுவாமிகள்
19. தண்டபாணி சுவாமிகள்
20. கிருபானந்தவாரியார்

5.8 சைவ ஆதீனங்கள்

அபிமான சிந்தாமணியில் காணப்பட்டுள்ள சுத்த சைவ பதினெண் ஆதீனங்கள் ஆவன :

1. திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை - 23வது குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.

2. தருமபுர ஆதீனம், தருமபுரம் - 26வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்.

3. காசிமடம், திருப்பனந்தாள் - 21வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துகுமாரசாமி தம்பிரான் சுவாமிகள்.

4. ஸ்ரீ கந்த பரம்பிரை சூரியனார் கோயில் ஆதீனம், சூரியனர் கோயில் - 27வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சங்கரலிங்க தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

5. தொண்டை மண்டல ஆதீனம், காஞ்சிபுரம் - 232வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பல தேசிக ஞானப் பிரகாச பிரமாச்சாரிய சுவாமிகள்.

6. மதுரை திருஞான சம்பந்தர் ஆதீனம், மதுரை - 292வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ லோககுரு அருணகிரிநாத ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

7. குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி - 46வது குருசன்னிதானம் திருவருள் திரு தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்.

8. செங்கோல் ஆதீனம், பெருங்குளம் - 102வது குருமகாசன்னிதானம் சீர்வளர்சீர் கல்யாண சுந்தர சத்தியஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

9. துழாவூர் ஆதீனம், துழாவூர் - 10வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர்.

10. வேளாகுறிச்சி ஆதீனம், கல்லிடை குறிச்சி - 17வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அஜபா நடேஸ்வர பண்டார சந்நதி.

11. நாச்சியார் கோயில் ஆதீனம், நாச்சியார் கோயில் - 6வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ மருதவாண தேசிகர் சுவாமிகள்.

12. வரணி ஆதீனம், வேதாரண்யம் - இலங்கையைச் சார்ந்தவர் வேதாரண்யம் திருக்கோயிலின் அறங்காவலர்களாக துவங்கிய பின் தெளிவான விபரங்கள் இல்லை.

13. வள்ளலார் ஆதீனம், சீர்காழி - 64 வள்ளலார்கள் இருந்தனர். கி.பி. 1960க்குப் பின் சிதைந்து விட்டது.

14. சொக்கபுர ஆதீனம், அம்பர் மாகாளம் - குருமகா சன்னிதானம் மருதவாணப் பிரகாச தேசிகருக்குப்பின் சிதைந்து விட்டது. தற்சமயம் திருவாவடுதுறை ஆதீனம் பராமரித்து வருகின்றது.

15. ஆகம சிவப்ரகாசர் ஆதீனம், சிதம்பரம் - ஆகம ஞானத்தில் சிறந்து விளங்கிய சிவப்பிரகாசர் குருமகா சன்னிதானமாக பணி ஆற்றினார். பின்னர் சிதைந்து விட்டது.

16. தாயுமானவர் ஆதீனம், அன்னப்பன் பேட்டை - தற்சமயம் இயங்கவில்லை.

17. நீலப்பாடி ஆதீனம், தஞ்சாவூர் - தற்சமயம் இயங்கவில்லை

18. இராமேச்சுர ஆதீனம், இராமேஸ்வரம் - தற்சமயம் இயங்கவில்லை.

5.9 அகோரசிவாசாரிய பத்ததி கூறும் மடங்கள்

1. கைலாச மடம் 2. பௌண்ட்ரக மடம் 3. வலாக மடம் 4. கற்பகிராம மடம் 5. பதரீ மடம் 6. தேவதாருவன மடம் 7. கந்தர்ப்ப மடம் 8. உத்தராரண்யகம் 9. தக்ஷிணாரண்யகம் 10. கோவிதார மடம் 11. ஆமந்தக மடம் 12. மத்த மடம் 13. மாயுரமடம் 14.ரணபத்ர மடம் 15. சோழக மடம்

5.10 இதர ஆன்மீக (சைவ) நிறுவனங்கள்

பேரூர் ஆதீனம், பேரூர் - தவத்திரு சாந்தலிங்க அடிகளார்.

பிள்ளையார் பீடம், பேரூர் - தவத்திரு பொன்மணி வாசக அடிகளார்.

குறும்ப சுவாமிகள் மடம், தென்சேரிகிரி.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருடமம், தென்சேரிமலை, கோவை தவத்திரு மாரிமுத்து சுவாமிகள்.

காமாட்சிபுரி ஆதீனம் - கோவை ஞானகுரு சாக்த ஸ்ரீ சிவலிங்கேஸ்வர சுவாமிகள்.

குரு பழநி ஆதீனம், மதுராந்தகம் - சிவத்திரு குருபழநி அடிகள்

சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலயம், வடலூர் - ஊரன் அடிகள்.

ஸ்ரீ சுவாமி விவேகானந்தா ஆஸ்ரமம், திருக்குற்றாலம் (சுவாமி அகிலானந்த)

ஞானபண்டித மடாலயம், திருப்பரங்குன்றம் (சுவாமி முருகானந்த)

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், வேதியபுரம் (சுவாமி அம்பிகானந்த)

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், அரக்கோணம் (சுவாமி கருணானந்த)

ஆஞ்சனேயர் ஆஸ்ரமம், அபுர நாச்சியார்புரம் (சுவாமி ராகவானந்த)

விவேகானந்த ஆஸ்ரமம், கல்படி (சுவாமி சைதன்யானந்த)

இராமகிருஷ்ண ஆஸ்ரமம், அம்பா சமுத்ரம் (சுவாமி ராமகிருஷ்ணானந்த)

வேலப்ப தேசிகர் திருமடம், பேரூர்

பகவான் அருணாசல சுவாமி ஆத்ம சாந்தி நிலையம், திருக்குற்றாலம்.

சேலம் ஸ்ரீ வித்ய ஆஸ்ரமம், சேலம்

ஸ்ரீ அப்பர் சுவாமிகள் ஆன்மீக சேவா சங்கம், உளுந்தூர் பேட்டை (ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்)

சிவசுப்ரமணிய சுவாமிகள் சாதுக்கள் மடாலயம், வேதாரண்யம், நாகை மாவட்டம்.

திருக்கயிலாய பரம்பரை திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிபுரியூர், கடலூர் மாவட்டம்.

மீனாட்சி சொக்கலிங்க சுவாமி திருமடம், தஞ்சாவூர்.

தவத்திரு சாது சுவாமிகள் திருமடம், பழனி

கூனம்பட்டி ஆதீனம், பல்ல கவுண்டன் பாளையம் (குரு மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்).

குமாரதேவர் திருமடம், விருத்தசலம் (23வது பட்டம் சீர்வளர் சீர் கல்யாண சுந்தர சிவப்பிரகாச பரமாச் சாரிய சுவாமிகள்)

பொம்மபுர ஆதீனம், மயிலம் (ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்)

ஸ்ரீ கந்த சஷ்டி மடாலயம், பொறையாறு தவத்திரு நடராஜ தேசிகர்.

ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் ஜீவசமாதிமடம், மடப்புரம் (குமாராந்த, பிரம்மானந்த சுவாமிகள்)

தெய்வீக வாழ்க்கை சங்கம், ராசிபுரம் (ஸ்ரீ சுவாமி சிவானந்தா)

ராமகிருஷ்ண தபோவனம், திருப்பாய்த்துறை (சுவாமி நித்யானந்த)

சிரவை ஆதீனம், கௌமார மடாலயம், கோவை (தவத்திரு குமரகுருபர அடிகளார்)

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமம், பசுபதி பாளையம்.

இன்னும் சில



5.11 வழிபாட்டு மன்றங்கள்

தற்போது சிவ வழிபாட்டில் முக்கிய பணிகளாக சமய சொற்பொழிவுகள், சமயப்பயிற்சி, முற்றோறுதல், தேவார பாடசாலை, அன்னதானம், குரு பூசை, ஆலயங்களில் உழவாரப்பணி, ஆலய வழிபாடுகளுக்கு உதவி செய்தல், கோவில் திருப்பணி, கூட்டுவழிபாடு போன்ற அரிய சிவத்தொண்டுகளை பல வழிபாட்டு மன்றங்கள் தொடர்ந்து செய்து வருகின்றன. அவற்றில் சில காண்போம்.

(a) காஞ்சிபுரம் மாவட்டம்

1. அறுபத்து மூவர் குருபூஜை விழாக்குழு, அருள்மிகு கச்சபேசர் திருக்கோயில்.
2. அறுபத்துமூவர் குருபூஜை விழாக்குழு, அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்.
3. நால்வர் நற்றமிழ் மன்றம்.
4. காஞ்சி சிவனடியார் கூட்டம்.
5. இந்து சமய மன்றம்.
6. காஞ்சி திருமுறை மன்றம்.
7. தமிழ்நாடு திருமுறை மன்றம்.
8. பிரதோஷ விழாக்குழு.
9. நித்திய பிரதோஷ வழிபாட்டுக்குழு, அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்.
10. நித்திய சாயிரட்சை அபிஷேக ஆராதனைக்குழு, அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்.
11. அர்த்தஜாம பள்ளியறை பூஜைக்குழு, அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில்.
12. வள்ளலார் பொது நெறிக்கழகம்.
13. குருவார வழிபாட்டுக்குழு.
14. கிருத்திகை வழிபாடு மற்றும் அன்னதானக்குழு.
15. திருவண்ணாமலை கிரிவலக்குழு.

16. சன்மார்க்க சங்கம்.
17. ஜனக்கல்யாண சேவாதனம்.
18. இறைபணி மன்றம்.
19. செங்கை இறையருள் மன்றம்.
20. சேக்கிழார் வழிபாட்டு மன்றம்.
21. குருவார வழிபாட்டு மன்றம்.
22. தமிழ்நாடு திருமுறை மன்றம்

(b) குமரி மாவட்டம்

1. வெள்ளிமலை விவேகானந்தர் . ஆஸ்ரமம், குமரி.
2. மெய்கண்டார் சமயப் பேரவை, நாகர்கோயில்.
3. தேவி கலாமன்றம், மண்டைக்காடு.

(c) ஈரோடு மாவட்டம்

1. கொங்கு மண்டலம் அப்பரடிகள் சிவநெறி வழிபாட்டுத் திருக்கூட்டம், விசயமங்கலம்.
2. சைவ சிந்தாந்த பேரவை, வெள்ளக்கோயில்.
3. குருவார வழிபாட்டு மன்றம், வெள்ளக்கோயில்.
4. சிவனடியார் திருக்கூட்டம், வெள்ளக்கோயில்.
5. கலாஞான சங்கம், சென்னிமலை.
6. பவானி சிவனடியார் திருக்கூட்டம், பவானி.
7. பவானி திருமுறைக்கழகம், பவானி.
8. ஸ்ரீ வாகீச சைவ சிந்தாந்த சன்மார்க்க சபை, கணபதி பாளையம்.
9. சேக்கிழார் திருப்பணி மன்றம், சிவகிரி.
10. சிவகுரு சித்தாந்தசபை, சிவகிரி.
11. மணிவாசகர் மன்றம், சென்னிமலை
12. சேக்கிழார் திருக்கூட்டம், கோபி
13. வாகீச பக்தஞான சபை, ஈரோடு.
14. சமரச சுத்த சன்மார்க்க ஜோதிசங்கம், ஈரோடு.

15. அருள் நெறித் திருக்கூட்டம், ஈரோடு.
16. திருமுறைக்கழகம், ஈரோடு.
17. சித்தம் அழகியார் வழிபாட்டுக்குழு, ஈரோடு.
18. திருமுறை வகுப்பு, ஈரோடு.
19. திருமந்திரம் குமரகுருமரர் நூல்கள் பொழிவு, ஈரோடு.
20 திருத்தொண்டீசர் உழவாரப் பணிக்குழு, ஈரோடு.
21 திலகவதியார் மகளிர் நற்பணி மன்றம், ஈரோடு.
22. மணிவாசகர் நற்பணி மன்றம், புஞ்சைப் புளியம்பட்டி.
23. சேக்கிழார் சிவநெறி வழிபாட்டு திருக்கூட்டம், பெருந்துறை.
24. தமிழக சைவ நெறிக்கழகம், பெருந்துறை.
25. சிவனடியார் திருக்கூட்டம், வெள்ளக்கோயில்.
26. திருமுருக பக்தர்கள் பேரவை, வெள்ளித்திருப்பூர்.
27. அருள்மிகு செல்லீஸ்வரர் வார வழிபாட்டுக்குழு, அந்தியூர்.
28. உழவாரப்பணிக்குழு, வெள்ளக்கோயில்.
29. பிரதோஷ வழிபாட்டுக்குழு, காங்கேயம்.
30. வேதநாயகி அம்மன் நற்பணி மன்றம், பெருந்துறை.
31. திருக்கோயில்கள் பேரவை, ஈரோடு.
32. பொம்மன்பட்டி திருவிளக்கு வழிபாட்டுக்குழு, வெள்ளித்திருப்பூர்.
33. முருகன் முத்தமிழ் மன்றம், கோபி.

(d) கடலூர் மாவட்டம்

1. சித்தாந்த சைவநெறி மன்றம், திருப்பாதிரிப்புலியூர்.
2. சிவசிவ பன்னிரு திருமுறை மன்றம்
3. கார்த்திகை வழிபாட்டு மன்றம், குறிஞ்சிப்பாடி.
4. உலகத்தமிழ் கழகம், குறிஞ்சிப்பாடி.
5. தெய்வத்தமிழ் கழகம், குறிஞ்சிப்பாடி.
6. சேக்கிழார் கழகம், நெய்வேலி.
7. திருப்புகழ் சபை, சிதம்பரம்.

8. தில்லைத் தமிழ் மன்றம், சிதம்பரம்.
9. மூவேந்தர் முத்துத்தமிழ் மன்றம், சிதம்பரம்.
10. வள்ளலார் மன்றம், சிதம்பரம்.
11. தில்லை சிவகாமி அம்மாள் மகளிர் மன்றம், சிதம்பரம்.
12. ஸ்ரீ பொல்லாப் பிள்ளையார் அன்னதான அறக்கட்டளை.
13. கடந்தை தமிழ்ச்சங்கம், திருப்பெண்ணாகடம்.
14. கடந்தைச் சிவனடியார் திருக்கூட்டம், திருப்பெண்ணாகடம்.
15. பன்னிரு திருமுறை வளர்ச்சிக்கழகம், நெய்வேலி. பழமலைநாதர் உழவாரத் தொண்டர் திருக்கூட்டம், விருத்தாசலம்.
16. கடந்தை உழவாரத் தொண்டர் குழு, திருப்பெண்ணாகடம்.
17. கடந்தை பன்னிரு திருமுறை நற்பணி மன்றம், திருப்பெண்ணாகடம்.
18. மெய்கண்டார் நற்பணி மன்றம், திருப்பெண்ணாகடம்.
19. உழவாரத் திருக்கூட்டம், திட்டக்குடி.
20. வார வழிபாட்டு மன்றம், இரையூர்.
21. வார வழிபாட்டு மன்றம், சத்தியவாடி.
22. திருநாவுக்கரசர் இறைபணி மன்றம், திருவதிகை.
23. சோமவார வழிபாட்டு மன்றம், திருவதிகை.
24. கிருத்திகை வழிபாட்டு மன்றம், திருவதிகை.
25. முருகன் செந்தமிழ் கழகம், கடலூர்.

(e) கரூர் மாவட்டம்

1. கரூர் சிவனடியார் திருக்கூட்டம், கரூர்.
2. தெய்வீக திருப்பணிக்குழு, கரூர்.
3. பொதுச்சமய சன்மார்க்க சங்கம், கரூர்.
4. அடியார்க்கு எளியார் அருட்பணி மன்றம், உப்பிடமங்கலம்.
5. திருஞான சம்பந்தர் அருள்நெறிக் கூட்டம், குளித்தலை.
6. அப்பர் வார வழிபாட்டுக்குழு, குளித்தலை.

7. சுந்தரமூர்த்தி நாயனார் அருள் நெறித் திருக்கூட்டம், குளித்தலை.
8. ஸ்ரீ மாணிக்க வாசகர் சன்மார்க்க சங்கம், குளித்தலை.
9. கண்ணப்ப நாயனார் அருள் நெறித் திருக்கூட்டம், இலாலா பேட்டை.
10. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள் நெறித் திருக்கூட்டம், தானியாம்பட்டி.
11. ஸ்ரீ மாணிக்கவாசகர் சன்மார்க்க சங்கம், சீகம்பட்டி.
12. ஸ்ரீ பசுபதீஸ்வரர் ஐயப்ப சேவா சங்கம், கருவூர்.

(f) தூத்துக்குடி மாவட்டம்

1. சைவ சித்தாந்த சபை திருஞான சம்பந்தர் மடாலயம், தூத்துக்குடி.
2. திலகவதியார் மாதர் கழகம் திருநாவுக்கரசு சுவாமிகள் மடாலயம், தூத்துக்குடி.
3. சிவஞான பிரகாச சபை, தூத்துக்குடி.

(g) நாகை மாவட்டம்

1. மணிவாசக மன்றம், செம்பொன்னார் கோயில்.
2. திருநாவுக்கரசு வழிபாட்டு மன்றம், வலிவலம்.
3. அம்பலவாணர் அருள் நெறிக்கழகம், பொறையாறு.
4. ஸ்ரீ சத்யசாயி சேவாசமிதி, பொறையாறு.
5. நாகை வெளிப்பாளையம் சைவசித்தாந்த சபை, நாகப்பட்டினம்.
6. சிறப்புலி நாயனார் வழிபாட்டு மன்றம், ஆக்கூர்.
7. கௌரி மயூரநாதர் வழிபாட்டு மன்றம், மயிலாடுதுறை.
8. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வழிபாட்டு மன்றம், திருக்குவளை.
9. திருஞான சம்பந்தர் வழிபாட்டு மன்றம், திருநெல்லிக்காவல்.
10. காஞ்சனூர் திருவருள் தவநெறி மன்றம், ஆடுதுறை.

(h) திருவாரூர் மாவட்டம்

1. சாந்தநாயகி அருட்பணி மன்றம், திருக்கொண்டீஸ்வரம்.
2. ஸ்ரீ மதுவனேஸ்வரர் சுவாமி வாரவழிபாட்டுக் கழகம், நன்னிலம்.

(i) திருநெல்வேலி மாவட்டம்

1. சிவநெறி மணிவாசகர் அருட்பணி மன்றம், பெருமாள்புரம், திருநெல்வேலி.
2. திருவுருமாமலை பன்னிரு திருமுறை வழிபாட்டுக்குழு, திருநெல்வேலி.
3. சைவ சபை, பாளையங்கோட்டை.
4. அப்பர் அருட்பணி மன்றம், பாளையங்கோட்டை.
5. திருநாவுக்கரசர் திருமடம், திருநெல்வேலி.
6. பன்னிரு திருமுறை வழிபாட்டுக்குழு, திருநெல்வேலி.

(j) காரைக்கால், பாண்டிச்சேரி

1. பிரதோஷ வழிபாட்டுக்கழகம், பாண்டிச்சேரி.
2. சக்தி விநாயகர் வழிபாட்டுக்கழகம், பாண்டிச்சேரி.
3. மெய்கண்டார் சைவத்திருத்தொண்டு மன்றம், பாண்டிச்சேரி.
4. திலகவதியார் திருமுறை வழிபாட்டு மன்றம், திருவேட்டக்குடி.
5. ஓங் காரானந்தா ஆஸ்ரமம், பாண்டிச்சேரி.

(k) தஞ்சாவூர் மாவட்டம்

1. திருஞான ச்ம்பந்தர் மன்றம், கும்பகோணம்.
2. திருக்குடந்தை சிவனடியார் திருக்கூட்டம், கும்பகோணம்.
3. அப்பர் அப்பூதி அடிகள் திருச்சபை, திருவையாறு.
4. ஐயாறடின் மெய்த்தொண்டர் இயக்கம், திருவையாறு.
5. ஜோதி மகாலிங்கேஸ்வரர் நற்பணி மன்றம், திருவிடை மருதூர்.
6. திருக்குடந்தை திருமுறை மன்றம், கும்பகோணம்.

7. கோணேசர் திருக்கோயில் வார வழிபாட்டு கழகம், குடவாசல்.
8. கார்த்திகை வழிபாட்டு கழகம், வலங்கைமான்.
9. திருவருள் தவநெறி மன்றம், துகிலி.
10. தஞ்சை அருள்நெறித் திருக்கூட்டம், தஞ்சாவூர்.
11. சைவசித்தாந்த பெருமன்றம், தஞ்சை.
12. சிறுத்தொண்ட நாயனார் மடாலயம், தஞ்சை.
13. பெரிய கோயில் வார வழிபாட்டுக் கழகம், தஞ்சை.
14. இராசராச சமயசங்கம், தஞ்சை.
15. வழிபாட்டு மன்றம், அம்மாபேட்டை
16. திருநாவுக்கரசு வழிபாட்டு மன்றம், கன்றாய்ப்பூர்.
17. அகிலாண்டேஸ்வரி வழிபாட்டு மன்றம், திருச்சிற்றேமம்.
18. சேக்கிழார் ஆதிவார வழிபாட்டுக் கழகம், திருநாகேஸ்வரம்.
19. திருஞான சம்பந்தர் வழிபாட்டு மன்றம், சாட்டியக்குடி.
20. ஸ்ரீ மாணிக்கவாசகர் நூல் நிலையம், மேல மருத்துவக்குடி, ஆடுதுறை.

இன்னும் பல



6. சைவ சிந்தாந்தம்

6 (i) செய்திகள்

சித்தாந்தங்கள் பல - சைவம் 16 - சச்சிதானந்தம் - ஐந்தொழில் - பஞ்சநாதம் - யுகதர்மம் - ஐவகை ஒழுக்கம் - அட்டாட்ட யோகங்கள் - தத்துவங்கள் - பருப்பொருள்.

6 (ii) ஆதார நூல்கள்

1. இ.எஸ்.டி. ஞானன் - தத்துவ தரிசனங்கள்
2. கழக வெளியீடு - சிவஞான போதமும், சிற்றுரையும்
3. இரா. இராஜசேகரன் - சைவப் பெருவெளியில் காலம்
4. அ.கி. மூர்த்தி - சைவ சித்தாந்த அகராதி
5. சந்தான குரவர் - பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள்
6. திருமூலர் - திருமந்திரம்



சைவ சித்தாந்தம் பயில

அணுகுங்கள்

1. முனைவர் சிவ. திருச்சிற்றம்பலம் கௌரவ இயக்குநர் சூரியனார் கோயில் ஆதீனம் திருமுறை சித்தாந்த ஆய்வு மையம், 8/49, மேலைச்சாலைத் தெரு, சுந்தரப் பெருமான் கோயில் 614208.

2. இயக்குநர், திருவாவடுதுறை ஆதீனம், சைவ சித்தாந்த நேர்முக பயற்சி மையம், சந்நிதி தெரு, திருவிடை மருதூர்.

3. சித்தாந்த ரத்தினம் தி. திருநாவுக்கரசு, பயிற்சி மைய அமைப்பாளர், 63/435, சிவகமலாம்பிகை இல்லைம், முல்லை/புதிய வீட்டு வசதிப் பிரிவு, தஞ்சை 613005.

4. செயலாளர், சைவ நெறிக்கவகம், 25/15, சந்நிதி வீதி, விக்கிரமசிங்கபுரம் 627425.

5. முனைவர் சித்தாந்த வித்யாநிதி, ர. வையாபுரி, 76, தென்வடல் வீதி, முத்துசாமி காலனி, கோவை 641026.

6. சிவத்திரு. சி. நல்லதம்பி, 27, ரங்கசாமிநகர், ரெட்டிபாளையம் ரோடு, தஞ்சை 613004.

7. கல்வெட்டறிஞர் பேரா. முனைவர் கா. அரங்கசாமி, 50, தமிழ் நகர், கோபி 638452

8. கயிலை மணி புலவர், இரா. மீனாட்சி, சித்தம் அழகியர் வழிபாட்டுக்குழு, பெரியார் நகர், ஈரோடு 638001.

6.1 சிந்தாந்தங்கள் பல

நல்ல வண்ணம் வாழும் வகையை வருத்துத்தருவது சமயமாகும். சமயக் கோட்பாடுகளை சித்தாந்தம் என்றும், மதபோதனை என்றும், தத்துவம் என்றும் சொல்லுகிறோம்.

மனித வாழ்க்கையின் குறிக்கோள் என்ன? எல்லாம் யோசிக்கும் வேளையில் உண்பதும் உறங்குவதுமாக முடியும் என்றார் ஒரு புலவர். ஒரு மனிதனின் வாழ்க்கையை சுருக்கமாக ஒரே வரியில் சொல்ல முன் வந்த மேனாட்டு அறிஞர் ஒருவர் சொன்னது - **'இளமையில் தவறு செய்கிறோம், பருவத்தில் போராடுகிறோம், முதுமையில் வருந்துகிறோம்'** என்றார். எப்படி வாழ வேண்டும்? எது நீதி எது அநீதி? எது உயர்ந்தது எது தாழ்ந்தது? எவர் நல்லவர் எவர் தீயவர்? இது போன்ற பல கேள்விகளுக்கு பதில் தேடும் போது, **'சமயம் - மதம் - சித்தாந்தம் - தத்துவம்'** கை கொடுக்கிறது.

அத்துடன் இந்த வையகத்தை இயக்குவது எது? அதன் குணங்கள் என்ன? பிறவிக்கும் அந்த பரம் பொருளுக்கும் உள்ள பிணைப்பு என்ன? என்ற வினாக்கள் எழும்போது 'பக்தி' என்றொரு உணர்வு உண்டாகின்றது. இறைவனை தேடும் முயற்சியே பக்தி என்றாயிற்று.

இத்தகைய ஆன்மீக சிந்தனைகளில் - இறைவனைப் பற்றியும் இறைவன் தந்த இந்த மண்ணுலக வாழ்க்கையின் வளம் பற்றியும் - அதிகம் கவனம் செலுத்திய சான்றோர் பலர் தொன்று தொட்டு பல்வேறு தத்துவங்களை - சமயங்களை - அறநெறிகளை - வாழும் கலையை விளக்கியுள்ளனர். அவற்றில் சில காண்போம்.

வைதீகம் - வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், புராணங்கள் இவற்றை ஆதாரமாக கொண்டது - காலம் நிர்ணயிக்க இயலாது. நிறுவியவர் பலர்.

2

புறப்புறச் சமயம்	- மாத்துமிகம், யோகாசாரம், சவுத்தி ராந்திகம், ஆருகதம், உலகாயதம், வைபாடிகம் முதலியன; வேத ஆகமங்களை புறக்கணிப்பவை. பௌத்தமும், சமணமும் இவற்றில் அடங்கும்.
புறச்சமயம்	- யோகம் (பதஞ்சலி, வியாசர்) - கி.மு.2ம் நூற்றாண்டு; நியாயம் (அட்சபாதர், வாத்ஸ்யாயனர்)-கி.மு.2ம்நூற்றாண்டு; சாங்கியம் (கபில முனிவர்) பூர்வமீமாம்சை (ஜைமினி, சரய முனிவர், பிரபாகர், பட்டாச்சாரியார்); உத்தரமீமாம்சை (அரத நாராயணர்) கி.மு. 5ம் நூற்றாண்டு; ஏகான்ம வாதம்; பாஞ்சராத்ரம்.
அகப்புறச்சமயம்	- பரசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கியவாத சைவம் - வேத ஆகமங்க்ளை ஏற்றுக் கொண்டாலும் அவற்றை சிறப்பாகக் கொள்ளாமல் பிரமாணங்களை ஏற்கின்றன; காலம், வளர்த்தவர் விபரம் தெளிவாக இல்லை.
அகச்சமயம்	- பாடா வாத சைவம், பேதவாதண சைவம், சிவச்சமவாத சைவம், சிவ சாங்கிராந்தவாத சைவம், ஈஸ்வர அதிகாரவாத சைவம், சிவாத்துவித சைவம் - வேத ஆகமங்களை ஒப்புக் கொண்டாலும் வேறுபாடுகள் பல உள.
வைசேடிகம்	- கணாதரர் நிறுவியது.

கிறிஸ்துவம்	-	இயேசு கிறிஸ்து - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்
இஸ்லாம்	-	முஹம்மது நபி - கி.பி. 6ம் நூற்.
சூஃபியிஸம்	-	ரபியா - கி.பி. 8ம் நூற்றாண்டு; இமாம் கஜாலி - கி.பி. 11ம் நூற்.;
அத்வைதம்	-	ஆதிசங்கரர் - கி.பி. 8ம் நூற்றாண்டு
விசிஷ்டாத் வைதம்	-	ராமானுஜர் - கி.பி. 11ம் நூற்றாண்டு
த்வைதம்	-	மத்வாச்சாரியார் - கி.பி. 12ம் நூற்.
காணாபத்யம்	-	ஆதிசங்கரர், ஔவையார், கபிலர் - கி.பி. 8ம் நூற்றாண்டு முதல்.
சிவம்	-	ஆதிசங்கரர், சமயக்குரவர், நாயன்மார்கள், சந்தானக்குரவர், தாயுமானவர் - கி.பி 8ம் நூற்றாண்டு முதல்
வைணவம்	-	ஆழ்வார்கள், வல்லபர், கௌராங்கர், ஆச்சாரியார்கள் - கி.பி. 8ம் நூற்றாண்டு முதல்
கௌமாரம்	-	ஆதிசங்கரர், அருணகிரிநாதர், பாம்பன் சுவாமிகள், சிதம்பர சுவாமிகள், தண்டபாணி சுவாமிகள், வள்ளலார், கிருபானந்த வாரியார் - கி.பி. 8ம் நூற்றாண்டு முதல்
சாக்தம்	-	ஆதிசங்கரர், அபிராமி பட்டர் - கி.பி. 8ம் நூற்றாண்டு முதல்
சௌரம்	-	ஆதிசங்கரர் - கி.பி. 8ம் நூற். முதல்

த்வைத அத்வைதம்	- நிம்பர்க்கர்
சித்தர் தத்துவம்	- பதினெண் சித்தர் (கி.பி. 9ம் நூற்றாண்டு முதல் 15ம் நூற்றாண்டு வரை)
வீரசைவம்	- பசவண்ணர் - கி.பி. 12ம் நூற்றாண்டு.
சைவ சித்தாந்தம் (சுத்தாத்வைதம்)	- மெய்கண்டார் - கி.பி. 12ம் நூற். உமாபதி சிவாச்சாரியார், அருள்நந்தி சிவனார், திருவதிகை மனவாசகம் கடந்தார், திருமூலர், ஆகம ஆசிரியர்கள்
முக்கியாத் வைதம்	- வாமதேவர்
சீக்கியம்	- குருநானக் - கி.பி. 15ம் நூற்றாண்டு / 16ம் நூற்றாண்டு
பரமாத்துவம்	- தத்துவராயர் - கி.பி. 16ம் நூற்.
ஆரிய சமாஜம்	- சுவாமி தயானந்த சரஸ்வதி - கி.பி. 19ம் நூற்றாண்டு.
சன்மார்க்கம்	- திரு அருட்பிரகாச வள்ளலார் - கி.பி. 19ம் நூற்றாண்டு.
பிரம்மஞான சமாஜம்	- ராஜாராம் மோகன்ராய் - கி.பி. 19ம் நூற்றாண்டு.
இராமகிருஷ்ண இயக்கம்	- ராமகிருஷ்ணர், விவேகாந்தர் - கி.பி. 19ம் நூற்றாண்டு.
சனாதன தர்மம்	- அரவிந்தர் - கி.பி. 19ம் நூற்றாண்டு.
ஆத்மவிசாரம்	- ரமணர் - கி.பி. 19ம் நூற்றாண்டு.
யோகம்	- சுவாமி சிவானந்தா - கி.பி. 20ம் நூற்றாண்டு. இன்னும் சில.

6.2 சைவம் 16 (சோடச சைவம்)

1. ஊர்த்த சைவம்	9. அத்துவா சைவம்
2. அநாதி சைவம்	10. யோக சைவம்
3. ஆதிசைவம்	11. ஞான சைவம்
4. மகா சைவம்	12. அணு சைவம்
5. பேத சைவம்	13. கிரியா சைவம்
6. அந்தர சைவம்	14. நாலுபாத சைவம்
7. குண சைவம்	15. சுத்த சைவம்
8. நிர்குண சைவம்	16. அபேத சைவம்

6.3 சச்சிதானந்தம்

சத்	- ஆற்றல்	- பதஞ்சலி முனிவர் இயற்றிய யோக சூத்திரங்கள்
சித்	- அறிவு	- வியாசர் இயற்றிய ப்ரம்ம சூத்திரங்கள்
ஆனந்தம்	- அன்பு	- நாரதர் இயற்றிய பக்தி சூத்திரங்கள்

6.4 பஞ்ச கிருத்தியங்கள் - 5
(ஐந்தொழில்)

ஆக்கல் - சிருஷ்டி	மறைத்தல் - திரோதானம்
காத்தல் - ஸ்திதி	அருளல் - அனுக்கிரஹம்
அழித்தல் - ஸம்ஹாரம்	

6.5 பஞ்ச நாதம் - 5

விசுவ நாதம்	இராம நாதம்
சோமநாதம்	வைத்தியநாதம்
ஜகந் நாதம்	

6.6 யுகதர்மம் - 4

கிருதயுகம் - மகாதவம்; துவாபரயுகம் - யாகம்

திரேதாயுகம் - தியானம்; கலியுகம் - தானம்

6.7 ஐவகை ஒழுக்கம்
(பஞ்சாசாரம்)

இலிங்கசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்யா சாரம். கணாசாரம்.

6.8 அட்டாங்க யோகங்கள - 8

1. இயமம்
2. நியமம்
3. ஆதனம்
4. பிராணாயாமம்
5. பிராத்தியாகாரம்
6. தாரணை
7. தியானம்
8. சமாதி

6.9 தத்துவங்கள - 96

1. பூதங்கள (பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) - 5
2. கர்மேந்திரியம் (வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபஸ்தயம் ஆகிய ஐம்புலன்கள்) - 5
3. கார்மேந்திரிய விஷயங்கள் (வசனம், கமனம், தானம், விசர்ச்சம், ஆனந்தம்) - 5
4. ஞானேந்திரியங்கள் (துவக்கு, சட்க, சரோத்திரம், ஜிஹ்வை, ஆக்கிராணம்) - 5
5. தன்மாத்திரைகள் (சப்த, ஸ்பரிச, ரூப, ரச, கந்தம்) - 5
6. அந்தகரணங்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம்) - 5
7. நாடிகள் (இடை, பிங்கலை, கழு, கண்டம், அட்சி, காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கிலி, குரு) - 10
8. வாயுக்கள் (பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன்) - 5

9. உபவாயுக்கள் (நாகன், கூர்மன், க்ருகரன், தேவதந்தன், தனஞ்சயன்) - 5

10. ஆச்ரயங்கள் (அமராச்ரயம், விபஜனாச்ரயம், ஜலாச்ரயம், மலாச்ரயம், சுக்லாச்ரயம்) - 5

11. கோசங்கள் (அன்னமயம், பிராணமயம், மனோமயம், விக்ஞான மயம், ஆனந்தமயம்) - 5

12. ஆதாரங்கள் (மூலாதாரம், சுவாதிட்டானம், மனிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞேயம்) - 6

13. தோஷங்கள் (வாதம், பித்தம், சிலேத்துமம்) - 3

14. ஈசனாத்ரங்கள் (தாரேசன, புத்திரேசன, வித்தேசன) - 3

15. குணங்கள் (சாத்வீகம், ராஜஸம், தாமஸம்) - 3

16. துர்குணங்கள் (இராக, துவேச, காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்ய, டம்ய, தர்ப, ஈர்சை, அசூயை, அகங்கார, மமகார) - 14

17. வினைகள் (நல்வினை, தீவினை) - 2

18. அவஸ்தைகள் (சாக்கிரம், சொர்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) - 5

96

வித்யா தத்துவங்கள் - 7

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை

சிவத்துவங்கள் - 5

சிவநெறிமுறை, சுத்த வித்தை, ஈசுவரம், சாதாக்கியம், நாதம்

6.10 பருப் பொருள்

முப்பொருள் - பதி, பசு, பாசம்

மூலப்பொருள் - சித்து, அசித்து, ஈசுவன்

7. தல, கோயில், இலிங்க வகைகள்

7 (i) செய்திகள்

இலிங்க வழிபாடு - பஞ்ச பூதங்கள் - பஞ்ச சபைகள் - தாண்டவதலங்கள் - பஞ்ச ஆரண்ய தலங்கள் - பஞ்ச ஆரண்யங்கள் - பரிவார தலங்கள் - சப்தவிட தலங்கள் - காசிக்கு சமமான தலங்கள் - அட்டவீரட்ட தலங்கள் - முக்தி தலங்கள் - சப்த ஸ்தானங்கள் - ஆதார தலங்கள் - நகரத்தார் கோயில்கள் - கோயில் வகைகள் - பைரவ தலங்கள் - புலிக்கால் முனிவர் தலங்கள் - சூரியன் வழிபட்டது - தேவர் வணங்கியது - லிங்க வகைகள் - பரிகார தலங்கள் - உயிரினங்கள் வழிபட்டது - பிறந்த நட்சத்திர தலங்கள் - சைவமும் வைணமும்.

7 (ii) ஆதார நூல்கள் :

1. கோயில் வெளியீடுகள்
2. புலவர் பு.மா. ஜெயசெந்தில்நாதன் - திருமுறை தலங்கள்.
3. பண்ணாரிதாசன் - பைரவ சஷ்டி கவசம் முதலிய வெளியீடுகள்.
4. எஸ்.பி. சபாரத்தினம் - சைவ ஆகமங்கள்.



7.1 இலிங்க வழிபாடு

இறைவனை அருவமாகவும் (பஞ்ச பூதங்களாக), உருவமாகவும் (அட்டாட்ட மூர்த்திகளாக) அவுருவமாகவும் (இலிங்கமாக) வழிபட்டு வந்துள்ளனர் சைவர்.

சிவபெருமானின் அருவுருத் திருமேனியே இலிங்கமாகும். ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற மூன்று தொழிலும் செய்து வரும் இறைநிலையைக் குறிக்க இலிங்கத்தின் அடிப்புறத்தை பிரம்மாவாகவும் (படைத்தல்), நடுப்புறத்தை திருமாலாகவும் (பாதுகாத்தல்), மேற்புறத்தை சிவனாகவும் (பிறப்பறுத்தல்) கூறுவது மரபு.

இலிங்கம் ஓங்காரத்தை காணுவதற்குரிய அறிகுறி. அகர, உகர, மகரங்களின் சேர்க்கை என்பது ஒரு விளக்கம்.

யோகப் பயிற்சியில் ஆறு ஆதார சக்கரங்கள் (மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்சை) உள. அவற்றுள் எழும் ஒளியே இலிங்கம் ஆகும் என்பர் ஒரு சாரார். வேள்வி முறையில் யாக குண்டத்தையும் அதனின்று எழும் தீப்பிழம்பையும் இலிங்கம் குறிக்கின்றது.

ஆகமங்கள் கூறுவதாவது : எந்த இடத்தில் பிரளய காலத்தில் அனைத்து பொருட்களும் லயம் அடைந்து பின்னற் படைப்பு காலத்தில் எதிலிருந்து மீண்டும் உற்பத்தியாகின்றனவோ அதுவே இலிங்கம். லிம் என்பது ஒடுங்குதலும், தம் என்பது வெளிவருதலையும் குறிக்கும்.

பொதுவாக, சிவனுருவாகிய இலிங்கத்தை, ஆன்மாக்கள் வழிபட்டு உய்ய வேண்டி சிவபெருமான் கொண்ட நிர்குணமான வடிவமாகக் கொள்வோம்.



7.2 பஞ்சபூத தலங்கள் (5)
(அருவம்)

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி நீராகி'

1. திருவாரூர் / காஞ்சிபுரம் - பிருத்வி (மண்)
2. திருவானைக்காவல் - அப்பு (நீர்)
3. திருவண்ணாமலை - தேயு (நெருப்பு)
4. திருக்காளாத்தி - வாயு (காற்று)
5. சிதம்பரம் - ஆகாயம் (வானம்)

7.3 பஞ்ச சபைகள் (5)

1. சிதம்பரம் - கனகசபை (பொன்னம்பலம்)
2. மதுரை - இரஜிதசபை (வெள்ளியம்பலம்)
3. திருநெல்வேலி - தாமிரசபை
4. திருக்குற்றாலம் - சித்திரசபை
5. திருவாலங்காடு - இரத்தினசபை

7.4 தாண்டவ தலங்கள (6)

1. சிதம்பரம் - ஆனந்த தாண்டவம்
2. பேரூர் - ஆனந்த தாண்டவம்
3. திருவாரூர் - அசவா தாண்டவம்
4. மதுரை - ஞான சுந்தர தாண்டவம்
5. அவினாசி - ஊர்த்துவ தாண்டவம்
6. திருமுருகன் பூண்டி - பிரம்ம தாண்டவம்

7.5 பஞ்ச ஆரண்ய தலங்கள் - 5

1. திருவெண்பாக்கம் - இலந்தைக்காடு
2. திருப்பாசூர் - மூங்கில்காடு
3. திருவெப்பூர் - ஈக்காடு
4. திருவாலங்காடு - ஆலங்காடு
5. திருவிற்கோலம் - தர்ப்பைக்காடு

7.6 பஞ்ச ஆரண்யங்கள் - 5

1. திருக்கருகாவூர் - முல்லைவனம் - வைகறை வழிபாடு
2. அவணிவநல்லூர் - பாதிரிவனம் - காலை வழிபாடு
3. அரதைப் பெரும்பாழி - வள்ளிவனம் - நண்பகல் வழிபாடு
4. திரு இரும்பூளை (ஆலங்குடி) - பூளைவனம் - மாலை வழிபாடு
5. திருக்கொள்ளம்புதூர் - வில்லவனம் - இரவு வழிபாடு

7.7 திருவிடை மருதூர் மகாலிங்க பெருமானின் பரிவார தலங்கள் - 11

1. திருவலஞ்சுழி (விநாயகர்)
2. திருவேரகம் (முருகன்)
3. திருவாவடுதுறை (நந்தி)
4. சூரியனார் கோயில் (நவகிரகங்கள்)
5. சேய்ஞலூர் (சண்டேசுரர்)
6. சிதம்பரம் (நடராஜர்)
7. சீர்காழி (பைரவர்)
8. திருவாரூர் (தியாகேசர்)
9. ஆலங்குடி (குரு)
10. திருநள்ளாறு (சனி)
11. திருக்கடவூர் (அம்பிகை)

7.8 சப்த விடத் தலங்கள் - 7

1. திருநள்ளாறு	- நகவிடங்கர்	- உன்மத்த நடனம்
2. திருவாரூர்	- வீதிவிடங்கர்	- அஜபா நடனம்
3. நாகப்பட்டணம்	- சுந்தரவிடங்கர்	- வீசி நடனம்
4. திருமறைக்காடு	- புவனி விடங்கர்	- ஹம்ஸபாத நடனம்
5. திருக்காறாயில்	- ஆதிவிடங்கர்	- குக்குட நடனம்
6. திருவாய்மூர்	- நீலவிடங்கர்	- கமல நடனம்
7. திருக்கோளிலி	- அவனி விடங்கர்	- பிருங்க நடனம்

7.9 காசிக்கு சமமான தலங்கள் - 6

1. திருவெண்காடு
2. மயிலாடுதுறை
3. திருசாய்க்காடு
4. திருவையாறு
5. திருவிடை மருதூர்
6. ஸ்ரீவாஞ்சியம்

7.10 அட்ட வீட்ட தலங்கள் - 8

பூமன் சிரம் கண்டி; அந்தகன்
கோவல்; புரம் அதிகை;
மாமன் பறியல்; சலந்தரமும்
விற்குடி; மாவழுவூர்
காமன் கொறுக்கை; இயமன்
கடவூர்; இக்காசினியில்
தோன்று கொன்றையும் திங்களும்
சூடிதன் சேங்கமே

1. திருக்கண்டியூர்	- பிரம்மனின் ஐந்தாவது தலையை கொய்தல்
2. திருக்கோவலூர்	- அந்தகாசுரவதம்
3. திருவதிகை	- திரிபுரதகனம்
4. திருப்பறியலூர்	- தக்ஷன் தலையை கிள்ளியது
5. திருவிற்குடி	- ஜலந்தர சம்ஹாரம்

6. திருவழுவூர் - கஜாசுரனை ஒறுத்தல்

7. திருக்குறுக்கை - காமதகனம்

8. திருக்கடவூர் - காலனை உதைத்தல்

7.11 முக்தி தலங்கள் - 4

மருவிய காசி ஆரூர் மன்னியவருணை தில்லை
இரும்பெரு வீட்டைச்சூழில் இறந்திடில் பிறக்கில் உன்னில்
அருள் பெறக் காணில் என்பர் அரிய வித்தலத்தில் இவ்வாறு
அருகிய பேதமின்றி அளித்திடும் எவர்க்கு முக்தி

காசி - இறந்தால்

திருஆரூர் - பிறந்தால்

திருவண்ணாமலை - நினைத்தால்

சிதம்பரம் - கண்டால்

7.12 குடந்தையை நடுவாகக் கொண்ட சப்தஸ்தானங்கள் - 7

1. கும்பகோணம்
2. தாராசுரம்
3. சுவாமிமலை
4. மேலைக்காவிரி
5. கலயநல்லூர்
6. திருவலஞ்சுழி
7. கொட்டையூர்

7.13 திருவையாற்றை நடுவாகக் கொண்ட சப்தஸ்தானங்கள் - 7

1. திருவையாறு
2. திருவேதிகுடி
3. திருப்பூந்துருத்தி
4. திருநெய்த்தானம்
5. திருப்பழனம்
6. திருச்சோற்றுத்துறை
7. திருக்கண்டியூர்

7.14 மயிலாடுதுறையை நடுவாகக் கொண்ட ஸப்தஸ்தானங்கள் - 7

1. வள்ளலார் கோயில்
2. கௌரி மாயூரம்
3. காசி விசுவநாதர் கோயில்
4. புனுகீசுவரர் கோயில்
5. சித்தர்காடு சம்பந்தசுவாமி கோயில்
6. சோழம் பேட்டை
7. வேலூர் வழி காட்டும் வள்ளல் கோயில்

7.15 ஆதார தலங்கள் - 8

மூலாதாரம்	- திருவாரூர்
சுவாதிஷ்டானம்	- திருவானைக்கா
மணிபூரகம்	- திருவண்ணாமலை
அநாகதம்	- சிதம்பரம்
விசுத்தி	- காசி
ஆக்ஞை	- காசி
பிரம்மரந்திரம்	- கயிலை
துவாத சாந்தம்	- மதுரை

7.16 நகரத்தார் ஒன்பது கோயில்கள் - 9

1. இளையாத்தான்குடி
2. மாத்தூர்
3. வைரவன் கோயில்
4. பிள்ளையார்பட்டி
5. இரணிகோயில்
6. நேமம்
7. இலுப்பைக்குடி
8. சூரக்குடி
9. வேலங்குடி

7.17 கோவில் வகைகள் (உதாரணத்துடன்)

பெருங்கோயில் (நன்னிலம்)
கரக்கோயில் (கடம்பூர்)
ஞாழற்கோயில் (விளநகர்)
கொகுடிக்கோயில் (கருப்பறியலூர்)
இளங்கோயில் (மீயச்சூர்)
ஆலக்கோயில் (திருக்கச்சூர்)
மாடக்கோயில் (குடவாயில்)

7.18 ஜென்ம நட்சத்திரத்திற்குரிய பைரவ தலங்கள்

எண்	நட்சத்திரம்	பைரவர்	தலம்
1.	அசுவினி	- ஞானனபரவர்	- பேரூர்
2.	பரணி	- மகாபைரவர்	- பெரிச்சியூர்
3.	கார்த்திகை	- அண்ணாமலைபைரவர்	-திருவண்ணாமலை
4.	ரோகிணி	- பிரம்மசிரகண்டீஸ்வரர்	- திருக்கண்டியூர்
5.	மிருகசிரிடம்	- க்ஷேத்திரபாலபைரவர்	- க்ஷேத்திரபாலபுரம்
6.	திருவாதிரை	- வடுகபைரவர்	- வடுகூர்
7.	புனர் பூசம்	- விஜய பைரவர்	- பழநி
8.	பூசம்	- ஆஸின பைரவர்	- ஸ்ரீ வாஞ்சியம்
9.	ஆயில்யம்	- பாதாள பைரவர்	- காளஹஸ்தி
10.	மகம்	- நர்த்தன பைரவர்	- வேலூர்
11.	பூசம்	- பைரவர்	- பைரவன் கோயில், பட்டீஸ்வரம்
12.	உத்திரம்	- ஜடாமண்டல பைரவர்	- சேரன்மாதேவி
13.	அஸ்தம்	- யோகாசன பைரவர்	- திருப்பத்தூர்
14.	சித்திரை	- சக்கர பைரவர்	- தர்மபுரி
15.	சுவாதி	- ஜடாமுனி பைரவர்	- பொற்பனைக்கோட்டை
16.	விசாகம்	- கோட்டை பைரவர்	- திருமெய்யம்

17.	அனுஷம்	- சொர்ண பைரவர்	- சிதம்பரம், ஆடுதுறை,தபசுமலை
18.	கேட்டை	- கதாயுத பைரவர்	- சூரக்குடி, வயிரவன்பட்டி
19.	மூலம்	- சட்டைநாதபைரவர்	- சீர்காழி
20.	பூராடம்	- வீர பைரவர்	- அவிநாசி, ஒழுகுமங்கலம்
21.	உத்திராடம்	- முத்தலைவேல்வடுகர்	- கரூர்
22.	திருவோணம்	- மாரித்தாண்டபைரவர்	- வயிரவன்பட்டி
23.	அவிட்டம்	- பலிபீடமூர்த்தி	- சீர்காழி, ஆறகழூர்
24.	சதயம்	- சர்ப்ப பைரவர்	- சங்கரன் கோயில்
93. அண்ணல்வாயில்; வேபெ - அன்னவாசல்; பிகோ - 622101; மாவ - புதுக்கோட்டை; வழி - புதுக்கோட்டைக்கு மேற்கில் 16 கி.மீ.; இ - விருத்தபுரீஸ்வரர்; அ - தர்மசம்வர்த்தினி; பா - அப்பர்; பதி - (கடுவாயர் தமை நீக்கி).

94. பெருந்துறை; வேபெ - வடக்கூர்; பிகோ - 614618; மாவ - புதுக்கோட்டை; வழி - ஆவுடையார் கோயிலுக்கு பக்கம் உள்ளது; இ - ஆதிக்கயிலாயநாதர்; அ - சிவகாமியம்மை; பா - அப்பர்; பதி - (கயிலாய மலையெடுத்தான் கரங்களோடு).

95. மிழலை நாட்டு மிழலை; வேபெ - பெருமாநல்லூர், தேவமலை; மாவ - புதுக்கோட்டை; வழி - புதுக்கோட்டை காரைக்குடி சாலையில் நடனசமுத்திரம், பொன்னமராவதி, பேறையூர், நற்சாந்துப்பட்டி வழியாக தேவமலை அடையவும்; இ - தேவநாதர்; அ - தேவநாயகி;

96. ஆலந்துறை; வேபெ - அந்தநல்லூர்; பிகோ - 639101; மாவ - திருச்சி; வழி - திருச்சி கரூர் சாலையில் ஜீயபுரம் தாண்டியதும் திருச்செந்துறை கடந்து ஆலந்துறை அடையவும்; இ - வடதீர்த்தேஸ்வரர், ஆலந்துறை மகாதேவர்;

அ - பாலசுந்தரி, பால சௌந்தர நாயகி; பா - சேக்கிழார்; பதி - பெரியபுராணம்;

97. ஊற்றத்தூர்; வேபெ - ஊட்டத்தூர்; பிகோ - 621109; மாவ - திருச்சி; வழி - சென்னை திருச்சி நெடுஞ்சாலையில் பாடாலூர், புள்ளம்பாடி வழியாக ஊட்டத்தூர் அடையவும்; இ - சுத்த ரத்னேஸ்வரர், தூய மாமணீஸ்வரர்; அ - அகிலாண்டேஸ்வரி; பா - அப்பர்; பதி - (நறையூரிற் சீந்தீச்சரம்), (பிறையூரும் சடைமுடி எம்பெருமான்).

98. செந்துறை; வேபெ - திருச்செந்துறை; பிகோ - 639101; மாவ - திருச்சி; வழி - திருச்சி கரூர் சாலையில் முத்தரசநல்லூர், ஜீயபுரம் தாண்டியதும் திருச்செந்துறை அடையலாம்; இ - சந்திரசேகரர்; அ - மானேந்தியவல்லி; பா - சேக்கிழார்; பதி - பெரிய புராணம்;

99. தவத்துறை; வேபெ - லால்குடி, எழுவர் தவத்துறை; பிகோ - 621601; மாவ - திருச்சி; வழி - திருச்சிக்கு அருகே உள்ளது; இ - சப்தரிஷீஸ்வரர்; அ - மஹாசம்பத் கௌரி; பா - அப்பர், அருணகிரிநாதர்; பதி - (கயிலாய மலையெடுத்தான்), (நிரைத்த நித்தில நீள்மணி).

100. தின்னகோணம்; பிகோ - 621202; மாவ - திருச்சி; வழி - முசிறியிலிருந்து வேனக்கா நத்தம் சாலையில் ஆனைப்பட்டி, காமாட்சிபட்டி, ஏவூர், நாச்சம்பட்டி வழியாக தின்னகோணம் சேரவும்; இ - பசுபதீஸ்வரர்; அ - கோவிந்தவல்லி; பா - சம்பந்தர்; பதி - (நெற்குன்றம் ஒத்தூர் நிறை).

101. துடையூர்; வேபெ - தொடையூர்; பிகோ - 621213; மாவ - திருச்சி; வழி - திருச்சி முசிறி நாமக்கல் சேலம் சாலையில் 10 கி.மீ. தொலைவு; இ - விஷமங்களேஸ்வரர்; அ - மங்கள நாயகி; பா - அப்பர்; பதி - (பிறையூருஞ் சடைமுடி).

102. பிடவூர்; வேபெ - திருப்பட்டூர்; பிகோ - 621105; மாவ - திருச்சி; வழி - சென்னை திருச்சி நெடுஞ்சாலையில் சமயபுரம் அருகில் உள்ள சிறுகனூரிலிருந்து 4 கி.மீ.; இ -

பிரமபுரீசுவரர்; அ - பிரம்மநாயகி; பா - அப்பர், சுந்தரர்; பதி - (தெய்வப் புனற்கெடில வீரட்டமும்) (ஆக்கூர் மூலப்படினம் ஆனைக்காவும்), (அம்மானே ஆகமசீலர்க்கு).

103. கோவந்தபுத்தூர்; வேபெ - கோவிந்தபுத்தூர்; பிகோ - **621701;** மாவ - பெரம்பலூர்; வழி - ஐயங்கொண்டத்திலிருந்து மதனத்தூர் சாலையில் தா.பழூர், காரைக்குறிச்சி, திருபுரந்தரன் வழியாக இவ்வூரை அடையலாம்; இ - கங்கா ஜடேஸ்வரர்; அ - மங்களநாயகி; பா - அப்பர், சம்பந்தர்; பதி - (கீதமுன் இசைதர), (பாண்டுவின் மகன்), (கொள்ளிடக்கரை கோவந்த).

104. தேனூர்; பிகோ - **621114;** மாவ - பெரம்பலூர்; வழி - திருச்சியிலிருந்து எதுமலை வழியாக துறையூர் செல்லும் சாலையில் உள்ளது; இ - நந்திகேஸ்வரர்; அ - மகாசம்பத் கௌரி; பா - சம்பந்தர், அப்பர், பதி - (ஆனூராவுழி தருவான்), (தந்தைதாய்)

கொங்குநாடு - 12

105. தகடூர்; வேபெ - தர்மபுரி; பிகோ - **636701;** மாவ - தர்மபுரி; வழி - தர்மபுரியிலிருந்து திருப்பத்தூர் சாலையில் வந்து வேல் பால் டிப்போவில் இடது பக்கம் பிரிந்து சென்றால் கோயிலை அடையலாம்; இ - மல்லிகார்ச்சுனர்; அ - காமாட்சி; பா - சுந்தரர்; பதி - (வீழக்காலனை கால்கொடு).

106. அவல் பூந்துறை; வேபெ - பூந்துறை; பிகோ - **638115;** மாவ - ஈரோடு; வழி - ஈரோட்டிலிருந்து அறச்சலூர் வழியாக பழனி செல்லும் பாதையல் 15 கி.மீ.; இ - புஷ்பவனேஸ்வரர்; அ - பாகம் பிரியாள்; பா - அப்பர்; பதி - (கயிலாய மலை எடுத்தான்), பூந்துறைப்புராணம் (சும்மா நைந்து இருவிலையால்).

107. குரக்குத்தளி; வேபெ - சர்க்கார் பெரியபாளையம்; பிகோ - **641607;** மாவ - ஈரோடு; வழி - திருப்பூர் ஊத்துக்குளி சாலையில் உள்ளது; இ - சுக்ரீஸ்வரர்; அ - ஆவுடைநாயகி; பா - சுந்தரர்; பதி - (கொம்பில் குறும்பில்).

108. பரப்பள்ளி; வேபெ - பரஞ்சேர்வழி, பரஞ்சை நகர், நட்டூர், மத்யபுரி, புகழ்பரஞ்சை பரன்சேர்பள்ளி; பிகோ - **638701**; மாவ - ஈரோடு, வழி - காங்கேயம் சென்னிமலை சாலையில் நால்ரோடு, நத்தக்காடையூர் வழியாக இவ்வூர் அடையலாம்; இ - மத்யபுரீஸ்வரர், நட்டூர்நாதர்; அ - சுகந்த குந்தளாம்பிகை, நட்டுவார் குழலம்மை; பா - அப்பர்; பதி - (பொருப்பள்ளி வரைவில்லா).

109. மூலனூர்; பிகோ - **638105**; மாவ - ஈரோடு, வழி - கரூர் பழநி சாலையில் சின்ன தாராபுரம், கன்னிவாடி அடுத்து மூலனூர் உள்ளது; இ - சோழீசுவரர்; அ - சௌந்தர்யநாயகி; பா - சுந்தரர்; பதி - (மூலனூர் முதலாய முக்கண்ணன்).

110. ஏழூர்; வேபெ - ஏளூர்; பிகோ - **637018**; மாவ - நாமக்கல்; வழி - நாமக்கல்லுக்கு அருகில் உள்ளது; இ - கைலாசநாதர்; பா - அப்பர்; பதி - (கொடுங்கோளூர் அஞ்சைக்களம்)

111. குமரிக்கொங்கு; வேபெ - கொங்கு குமரித்துறை, மோகனூர்; பிகோ - **637015**; மாவ - நாமக்கல்; வழி - நாமக்கல்லிலிருந்து மோகனூர் 17 கி.மீ.; இ - அசல தீபேஸ்வரர்; அ - மதுகரவேணி; பா - அப்பர்; பதி - (தீண்டீஸ்வரம் சேய்ஞலூர் செம்பொன்பள்ளி).

112. அறப்பள்ளி; வேபெ - கொல்லி அறப்பள்ளி, கொல்லிமலை, கொல்லி குளிரறைப் பள்ளி; பிகோ - **637411**; மாவ - நாமக்கல்; வழி - நாமக்கல்லிலிருந்து 52 கி.மீ.; இ - அறப்பளீசுவரர்; அ - தாயம்மை; பா - சம்பந்தர், அப்பர்; பதி - (அறல்பண்மி அகத்தியாள்பள்ளி), (தில்லைச் சிற்றம்பலமும்), (பொருப்பள்ளி வரைவில்லாப் புரமூன்றெய்து), திருநெய்த்தான பதிகம், (அறப்பளீசுர சதகம்).

113. தோழூர்; வேபெ - தோளூர்; பிகோ - **637017**; மாவ - நாமக்கல்; வழி - நாமக்கல் மோகனூர் அணியாபுரம் வழியாக 3 கி.மீ.ல் தோளூர் அடையலாம்; இ - சோளீசுவரர்; அ - விசாலாட்சி; பா - அப்பர்; பதி - (கொடுங்கோளூர் அஞ்சைக்களம்), (பிறையூரும் சடைமுடி).

114. ஆன்பட்டிப்பேறூர்; வேபெ - பேரூர், காஞ்சி வாய்ப்பேர் மேலச்சிதம்பரம்; பிகோ - 641010; மாவ - கோயம்புத்தூர்; வழி - கோயம்புத்தூர் அருகில் உள்ளது; இ - பட்டிப் பெருமான், பட்டீஸ்வரர்; அ - பச்சைநாயகி; பா - அப்பர், சுந்தரர்; பதி - (ஆரூர் மூலட்டானம் ஆனைக்காவும்), (அஞ்சைக்களத்துள்ளார்), (சிந்தும் புனற்கெடில வீரட்டமும்), (ஆரூர் அத்தா ஐயாற்று) (பாரூடும் அரவு அல்குல் உமைநங்கை).

115. மாட்டூர்; வேபெ - சேவூர்; பிகோ - 638655; மாவ - கோவை; வழி - அவிநாசியிலிருந்து 8 கி.மீ.; இ - வாலீசுவரர்; அ - தர்மச வர்த்தினி, அறம் வளர்த்த நாயகி; பா - சம்பந்தர், சுந்தரர்; பதி - (மாட்டூர் மடப்பாச்சிலாச்சிராம), (காட்டூர் கடலே கடம்பூர் மலையே)

116. மொக்கணீச்சரம்; பிகோ - 638462; மாவ - கோவை; வழி - அவிநாசியிலிருந்து அத்தியூர் சாலையில் சேவூர், குட்டகம் வழியாக ஊர் சேரவும்; இ - மொக்கணீசுவரர்; பா - மாணிக்க வாசகர்; பதி - (மொக்கணி அருளிய முழுத்தழல்) திவாத;

பாண்டியநாடு - 5

117. அத்தீச்சுரம்; வேபெ - சிவசைலம்; பிகோ - 627412; மாவ - திருநெல்வேலி மாவட்டம்; வழி - ஆழ்வார் குறிச்சியிலிருந்து கடனாநதி அணைசாலையில் கல்யாணிபுரம் வழியாக ஊர் சேரலாம்; இ - சைலநாத சுவாமி, அத்ரீஸ்வரர், சிவசைலநாதர்; அ - பரம கல்யாணி; பா - அப்பர்; பதி - (நாடக மாடிட நந்திகேச்சுர).

118. அயனீச்சரம்; வேபெ - பிரமதேசம்; பிகோ - 627413; மாவ - திருநெல்வேலி; வழி - அப்பா சமுத்திரத்திலிருந்து 37 கி.மீ.; இ - கைலாசநாதர்; அ - பெரியநாயகி; பா - அப்பர்; பதி - (நாடகமாடி நந்திகேச்சுர).

119. திரிபுராந்தகம்; பிகோ - 627002; மாவ - திருநெல்வேலி; வழி - பாளையங் கோட்டையில் உள்ளது; இ - திரிபுராந்தகர்; அ - விசாலாட்சி; பா - அப்பர்; பதி - (செழுநீர் புனற்கெடில).

120. திருமலை; வேபெ - திருமலைக்குமாரசாமி கோவில்; பிகோ - **627811**; மாவ - நெல்லை மாவட்டம்; வழி - தென்காசிக்கு அருகில்; பா - அப்பர்; பதி - (ஈழநாட்டு மாதோட்டம்).

121. தென்களக்குடி; வேபெ - களக்காடு; பிகோ - **627501**; மாவ - நெல்லை மாவட்டம்; வழி - திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி வட்டத்தில் வன்னிமியூரிலிருந்து 20 கி.மீ.; இ - சத்தியவாகீஸ்வரர்; புன்னைவன நாதர், பிரமநாயகன், பரிதி நாயகன், சுந்தர லிங்கம், களந்தை லிங்கம், வைரவ லிங்கம், வீரமார்த்தாண்ட லிங்கம், திரிபுரஹரன், வைரவநாதர், சாமள மகாலிங்கர், சோமநாயகர், குலசை நாயகர்; அ - கோமதியம்மாள்; பா - அப்பர்; பதி - (நற்கொடி மேல் விடையுயர்த்த), களந்தைப் புராணம் (சந்திர வேணியானை).

122. பூந்துறை; வேபெ - சிந்து பூந்துறை; பிகோ - **627006**; மாவ - திருநெல்வேலி; வழி - திருநெல்வேலியில் பேருந்து நிலையம் அமைந்துள்ள பகுதி; இ - மீனாட்சி சுந்தரேஸ்வரர்; அ - மீனாட்சி; பா - அப்பர்; பதி - (கயிலாய மலையெடுத்தான்).

123. பொதியின்மலை; வேபெ - பாபநாசம்; பிகோ - **627435**; மாவ - நெல்லை மாவட்டம்; வழி - திருநெல்வேலிக்கு அருகில் உள்ளது; இ - பாவநாசர், பாபவிநாசகர்; அ - லோகநாயகி, உலகம்மை; பா - அப்பர், மாணிக்கவாசகர்; பதி - (தெய்வப் புனற்கெடில), திருவாசகம் (மன்ன எம்பிரான் வருக), (பாவநாச உன்பாதமே).

124. கந்தமாதனமலை; வேபெ - திருச்செந்தூர்; பிகோ - **628215**; மாவ - தூத்துக்குடி; வழி - திருச்செந்தூர் முருகன் கோயிலை ஒட்டி உள்ளது இ - சிவன்; அ - பார்வதி; பா - அப்பர்; பதி - (கந்தமாதனம் கயிலைமலை கேதாரம்).

125. செந்தில்; வேபெ - திருச்செந்தூர், திருச்சீரலைவாய்; பிகோ - **628215**; மாவ - சிதம்பரனார்; வழி - அறுபடை வீடுகளில் ஒன்றாக கருதப்படும் முருகன் தலம்; இ - செந்திற்பதி புரக்கும் செவ்வேள்; பா - அப்பர்; பதி - (கன்னி முதுகாட்டில் ஆடிக்கன்பாய்).

126. திருவேகம்பத்து; வேபெ - திருவேகம்பம், திருவேகம்பட்டு; பிகோ - 623408; மாவ - இராமனாதபுரம்; வழி - காளையார் கோயிலுக்கும் திருவாடானைக்கும் மத்தியில் உள்ளது; இ - ஏகாம்பரேஸ்வரர், ஏகாம்பரேஸ்வரர், ஏகாம்பரநாதர்; அ - சிநேகவல்லி; பா - அப்பர்; பதி - (எச்சில் இளமர் ஏமநல்லூர்).

127. இளையான்குடி; வேபெ - இளையாங்குடி; பிகோ - 630702; மாவ - சிவகங்கை; வழி - பரமக்குடி காரைக்குடி சாலையில் எமனேஸ்வரம், குமாரகுறிஞ்சி தாண்டி வருவது; இ - ராஜேந்திர சோளீஸ்வரர்; அ - ஞானாம்பிகை; பா - சுந்தரர்; பதி - திருத்தொண்டத்தொகை.

128. இறையான்சேரி; வேபெ - இறகுசேரி; பிகோ - 630302; மாவ - சிவகங்கை; வழி - தேவகோட்டைக்கு 1 கி.மீ. தொலைவில் உள்ளது; இ-மும்முடிநாதர்; அ - சௌந்தரநாயகி; பா - அப்பர்; பதி - (எச்சில் இளமர் ஏமநல்லூர்).

129. தஞ்சாக்கூர்; வேபெ - ஆதிவில்வவன க்ஷேத்திரம்; பிகோ - 630610; மாவ - சிவகங்கை; வழி - மதுரை மானாமதுரை சாலையில் திருப்புவனத்திற்கு அப்பால் திருப்பாச்சேத்தி வந்து அங்கிருந்து 5 கி.மீ. தொலைவு; இ - பரஞ்சோதீஸ்வரர்; அ - ஞானாம்பிகை பா - சுந்தரர்; பதி - (தழலு மேனியன் தையலொர் பாகம்).

130. வெற்றியூர்; வேபெ - திருவெற்றியூர், ஜயபுரி; பிகோ - 623407; மாவ - சிவகங்கை; வழி - திருவாடானையிலிருந்து தொண்டி செல்லும் பாதையில் திருவெற்றியூருக்கு கிளைச்சாலை உள்ளது; இ - வன்மீகநாதர்; அ - பாகம்பிரியாள்; பா - சம்பந்தர், அப்பர், சுந்தரர்; பதி - (மனவஞ்சர் மற்றேட), (உஞ்சேனை மாகாளம் ஊறல்), (மூலனூர் முதலாய முக்கண்ணர்).

131. அகத்தீச்சுரம்; வேபெ - அகத்தீஸ்வரம்; பிகோ - 629702; மாவ - கன்னியாகுமரி; வழி - கன்னியாகுமரிலிருந்து 5 கி.மீ.; இ - அகத்தீஸ்வரர் அ - அறம் வளர்த்த நாயகி, அமுதவல்லி, பா - அப்பர்; பதி - (நாடகமாடிட நந்தி).

132. தேவீச்சுரம்; வேபெ - வடிவீஸ்வரம்; பிகோ - 629001; மாவ - கன்னியாகுமரி; வழி - நாகர்கோயிலில் திருவள்ளுவர் பேருந்து நிலையம் அருகில் உள்ளது; இ - சுந்தரேஸ்வரர்; அ - வடிவழக நாயகி, அழகேஸ்வரி; பா - அப்பர்; பதி - (செமுநீர் புனற்கெடில).

புதுவை மாநிலம் - 2

133. தக்களூர்; பிகோ - 609607; மாவ - காரைக்கால்; வழி - மயிலாடுதுறை பேரளம் காரைக்கால் சாலையில் திருநள்ளாறு பக்கம் 1 கி.மீ.; இ - திருலோகநாதர்; அ - தர்மசம்வர்த்தினி; பா - அப்பர், சுந்தரர்; பதி - (மங்குல் மதிதவழும்), (அஞ்சைக் களத்துள்ளார்), (இடைமருது ஈங்கோய் இராமேச்சரம்), (வீழக்காலனை கால்கொடு).

134. திருமலை; வேபெ - திருமலை ராயன்பட்டினம், திருபட்டினம்; பிகோ - 609606; மாவ - புதுவை; வழி - காரைக்காலுக்கு அண்டையில் உள்ளது; இ - ராஜசோளீச்வரர்; அ - அபிராமி; பா - சுந்தரர்; பதி - (ஈழநாட்டு மாதோட்டம்)

ஆந்திர மாநிலம் - 4

135. திருக்காரிக்கரை; வேபெ - ராமகிரி; பிகோ - 517589; மாநி - ஆந்திரா; வழி - சித்தூர் மாவட்டத்தில் நாகலாபுரத்துக்கு பக்கம்; இ - வாலீஸ்வரர்; அ - மரகதாம்பாள்; பா - சுந்தரர்; பதி - (கடங்களூர் திருக்காரி கரை).

136. குக்குடேச்சுரம்; வேபெ - திருக்கோழீச்சரம்; பிகோ - 517247; மாநி - ஆந்திரா; வழி - சித்தூர் மாவட்டத்தில் புங்கனூரில் உள்ளது; இ - குக்குடேஸ்வரர்; பா - அப்பர்; பதி - (நாடகமாடிட நந்திகேச்சுர மாகாளே).

137. திருபுராந்தகம்; வேபெ - சிம்மாசலம்; பிகோ - 530028; மாநி - ஆந்திரா; வழி - விசாகப்பட்டினம் அருகில் 18 கி.மீ. தொலைவில் சிம்மாசலத்தில் உள்ளது; இ - திரிபுராந்தகேஸ்வரர்; பா - அப்பர்; பதி-(செழுதீர் புனற்கெடில).

138. விவீச்சுரம்; வேபெ - பீமீச்சுரம், இடர்க்கரம்பை; பிகோ - 534201; மாநி - ஆந்திரா; வழி - கோதாவரி மாவட்டத்தில் உள்ளது; இ - பீமேஸ்வரர்; பா - அப்பர்; பதி - (உஞ்சேனை மாகாளம் ஊறல்).

கர்நாடகம் - 2

139. காம்பிலி; வேபெ - கம்பிலி; பிகோ - 583132; மாநி - கர்நாடகம்; வழி - பெல்லாரி மாவட்டம் ஹாஸ்பெட்டிலிருந்து 35 கி.மீ. தொலைவு; பா - அப்பர்; பதி - (ஆரூர் மூலட்டானம் ஆனைக்கா).

140. நந்திகேச்சுரம்; வேபெ - நந்திமலை; பிகோ - 562118; மாநி - கர்நாடகம்; வழி - மைசூருக்கு அருகில் உள்ளது; இ - நந்தீஸ்வரர்; பா - அப்பர்; பதி - (நாடகமாடிட நந்திகேச்சுரம்).

கேரளம் - 4

141. ஏறனூர்; வேபெ - ஏற்றமனூர், எட்டுமானூர்; பிகோ - 686631; மாநி - கேரளா; வழி - எர்ணாகுளம் கோட்டயம் பாதையில் உள்ளது; இ - சிவன்; பா - சுந்தரர்; பதி - (பேறனூர் பிறைச்சென்னியான்).

142. குணவாயில்; வேபெ - குணவாயிற் கோட்டம்; மாநி - கேரளம்; வழி - கொடுங்கோளூருக்கு மேற்கில் உள்ளது; பா - அப்பர்; பதி - (கருவாயர் தமை நீக்கி என்னையாட்).

143. கொடுங்கோளூர்; பிகோ - 680664; மாநி - கேரளம்; வழி - திருச்சூரிலிருந்து 40 கி.மீ.; இ - சிவன்; அ - பகவதி; பா - அப்பர், சுந்தரர்; பதி - (கொடுங்கோளூர் அஞ்சைக்களம்), (தலைக்கு தலைமாலை).

144. திருச்செங்குன்னூர்; வேபெ - செங்கண்ணூர்; பிகோ - 689121; மாநி - கேரளம்; வழி - கோட்டயம் செங்கணாச்சேரி வழியில் திருவிள்ளாவிற்கு அடுத்து உள்ளது; இ - சிவன்; அ - பகவதி; பா - அப்பர்; பதி - (கொடுங்கோளூர் அஞ்சைக்களம்).

145. மாகாளம்; வேபெ - உஞ்சை மாகாளம், உஜ்ஜயினி; உஞ்சை, உஞ்சேனை, அமராவதி, சிதபுரி, விசாலா; பிகோ - **456001;** மாநி - மத்திய பிரதேசம்; இ - மஹா காளேஸ்வரர்; வழி - சென்னை புதுடெல்லி பாதையில் போபால் அருகில் உள்ளது; பா - அப்பர்; பதி - (தேனார் புனற்கெடில வீரட்டமும்).

146. குருக்ஷேத்திரம்; பிகோ - **132118;** மாநி - ஹரியானா; வழி - புதுடெல்லியிலிருந்து ரயில் / பேருந்து வசதி உள்ளது; இ - சிவன்; பா - சுந்தரர்; பதி - (தனிசாலைகள் தவமாவது தம்மைப் பெறில்).

147. வாரணாசி; வேபெ - காசி, ஆனந்தவனம்; பிகோ - **221001;** மாநில - உத்திரபிரதேசம்; வழி - உபியில் முக்கிய நகரம்; இ - விசுவநாதர்; அ - விசாலாட்சி, அன்னபூரணி; பா - சம்பந்தர்; பதி - (மாட்டூர் மடப்பாச்சிலா).



9.9 அருணகிரிநாதர் திருப்புகழில் பாடி சிவ (முருக) தலங்கள் - 218

அருணகிரிநாதர் பாடிய தலங்கள் 230 தெளிவானவை 198 ஆய்வுக்குரியவை 12; வைப்புத்தலங்கள் 20.

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழை ஒரு தோத்திர நூலாக மட்டும் எண்ணாமல் ஆலய வழிபாட்டு கண்ணோட்டத்தில் ஆராயும் போது மாவட்ட / மாநில வாரியாக அவற்றை வகுத்துப் பார்ப்பது பெரும்பயன் தரும்.

சென்னை 3; திருவள்ளூர் 11; காஞ்சிபுரம் 12; வேலூர் 9; திருவண்ணாமலை 4; விழுப்புரம் 9; கடலூர் 15; சேலம் 1; நாமக்கல் 3; தர்மபுரி 1; கோயம்புத்தூர் 6; ஈரோடு 9; தஞ்சாவூர் 22; மதுரை 3; திண்டுக்கல் 3; தேனி 1; திருச்சிராப்பள்ளி 11; பெரம்பலூர் 2; கரூர் 6; புதுக்கோட்டை 3; நாகப்பட்டினம் 21; திருவாரூர் 15; திருநெல்வேலி 6; சிவகங்கை 3; இராமனாதபுரம் 3; தூத்துக்குடி 2; பாண்டிச்சேரி 2; ஆந்திரா 3; கேரளம் 1; உத்திர பிரதேசம் 2; கர்நாடகம் 1; வடிந்தியா 2; இலங்கை 3; ஆய்வுக்குரியது 12; வைப்புத்தலங்கள் 20; மொத்தம் 230

சென்னை மாவட்டம் - 3

1. மயிலாப்பூர்; தேவாத; திருப்புகழில் 'அமரு மாமரரிணி லதிக னயனுமரி' என தொடங்கி 10 பாடல்கள் (696 - 705).

2. திருவான்மியூர்; தேவாத; திருப்புகழில் 'குசமாகி யாருமலை மரை மாநு' என்று ஒரு பாடல் (706).

3. திருவொற்றியூர்; தேவாத; திருப்புகழில் 'கரிய முகில் போலு மிருளகை பார' என தொடங்கி 2 பாடல்கள் (707, 708)

திருவள்ளுவர் மாவட்டம் - 11

4. திருத்தணிகை - 631209; வேபெ - செருத்தணிகை; வழி - சென்னை, அரக்கோணம், காஞ்சிபுரம் அருகில் உள்ளது; இ - பிரம்மலிங்கம்; மு - தணிகைநாதன், செங்கல்வராயன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'அரகர சிவனரி அயனிவர்' என்று தொடங்கி 66 திருப்புகழ் பாடல்கள் (248 - 311); சிறப்பு - முருகன் வள்ளியை மணந்தது;

5. வெள்ளிக்கரம் - 631207; வேபெ - வெள்ளிநகர்; வழி - திருத்தணியிலிருந்து 36 கி.மீ.; இ - சோமநாதர்; அ - மரகதவல்லி; மு - வெள்ளிகர வேலன்; த - நெல்லி; பா - அருணகிரிநாதர்; பதி - 'அடலடி மகவு விதிவழி' என தொடங்கி 9 திருப்புகழ் பாடல்கள் (666 - 674);

6. திருவாலங்காடு; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - கனவாங்கூர்விழி என்று தொடங்கி 4 திருப்புகழ் பாடல்கள் (683 - 686);

7. திருவேற்காடு; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - ஆலம்போ லெழுநீல மேலங்காய் என தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (690, 691).

8. வடதிருமுல்லைவாயில்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - அணி செல்வி யார் திரை சூழ் புவி எனத்தொடங்கும் 3 திருப்புகழ் பாடல்கள் (692-694).

9. திருவலிதாயம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - மருமல்லியார் குழலின் மடமாதர் எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (695).

10. கோயம்பேடு - 600107; வேபெ - கோசைநகர்; வழி - சென்னையிலிருந்து 12 கி.மீ. அரும்பாக்கம் அருகில்; இ - குசலவபுரீசர், வைகுண்டவாசர், குறுங்காலீஸ்வரர்; அ - அறம் வளர்த்த நாயகி; மு - சுப்ரமணியர்; பா - அருணகிரிநாதர்; பதி - ஆதவித பாரமுலை மாதரிடை என்னும் ஒரு திருப்புகழ் பாடல் (709); சிறப்பு - அதிகார நந்தி அற்புதமானது.

11. சிறுவை - 601206; வேபெ - சின்னம்பேடு, சிறுவம்பேடு, சிறுவாபுரி; வழி - சென்னையிலிருந்து 35 கி.மீ. பொன்னேரி வழியில்; இ - அண்ணாமலை யார்; அ - உண்ணாமுலை; மு - வள்ளி கல்யாண சுந்தரர்; பா - அருணகிரிநாதர்; பதி - அண்டர்பதி குடியேற மண்டசுரர் எனத்தொடங்கும் 4 திருப்புகழ் பாடல்கள் (735 - 738); சிறப்பு - பஞ்சலோகப் படிமம் அற்புதமானது, தனிப்பாடல்கள் உள;

12. தச்சூர் - 600103; வேபெ - ஆண்டார் குப்பம்; வழி - சென்னையிலிருந்து பொன்னேரி பாதையில் 1 கி.மீ.; இ - விசுவநாதர்; அ - விசாலாட்சி; மு - குமரதச்சன்; பா - அருணகிரிநாதர்; பதி - அச்சாயிருக்காணி காட்டி எனத்தொடங்கும் திருப்புகழ் பாடல் ஒன்று (743).

13. பாகசாலை - 600311; வேபெ - பாகை; வழி - சென்னை அரக்கோணம் பாதையில் மணவூருக்கு 4 கி.மீ./தெ; இ - திருமூலநாதசுவாமி; அ - திருவுடை நாயகி; மு - பாதிரி ஐயா, பாலசுப்ரமணிய சுவாமி; பா - அருணகிரிநாதர்; பதி - ஆடல் மாமதராஜன் பூசல் எனத்தொடங்கும் 3 திருப்புகழ் பாடல்கள் (807-809); சிறப்பு - கல்வெட்டுக்கள் உள்ளன;

14. நெடியம் - 602004; வேபெ - நெடியமலை, கஜகிரி, யானை மலை; வழி - திருத்தணியிலிருந்து பள்ளிப்பட்டு வழியில் உள்ளது; இ - செங்கல்வராய சுவாமி, சுமித்ரேஸ்வரர்; மு - ஆறுமுக சுவாமி; பா - அருணகிரிநாதர்; பதி - எனையடைந்த குட்டம் என்றும் ஒரு திருப்புகழ் பாடல் (254).

15. திருக்கழுக்குன்றம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - அகத்தினைக் கொண்டிப்புவி எனத்தொடங்கும் 4 திருப்புகழ் பாடல்கள் (323-326).

16. காஞ்சிபுரம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - அரியயன் புட்பிக்கக்குழு என்று தொடங்கும் திருப்புகழ் பாடல்கள் 43 உள (457 - 500).

17. இளையனார் வேலூர் - 631605; வேபெ - வேலூர்; வழி - சேயாற்றின் வடகரையில் காஞ்சிபுரத்திலிருந்து 24 கி.மீ.; மு - வேலாயுதம்; பா - அருணகிரிநாதர்; பதி - அதிகராய் பொருளீவா எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (676, 677); சிறப்பு - மலையன், மாகரன் என்ற அசுரர்களை முருகன் அழித்தது.

18. மாடம்பாக்கம் - 603202; வேபெ - கபிலக்ஷேத்திரம், மாடையம்பதி; வழி - தாம்பரத்திற்கு 7 கி.மீ./கி; இ - தேனுபுரீசர்; அ - தேனுகாம்பிகை; மு - சிவசுப்ரமணியசுவாமி; பா - அருணகிரிநாதர்; பதி - தோடுறும் குழையாலே கோல்வனை எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (711, 712); சிறப்பு - கல்வெட்டுக்கள் உள.

19. கோடைநகர் - 602112; வேபெ - வல்லக்கோட்டை; வழி - ஸ்ரீ பெரும்புதூருக்கு 10 கி.மீ./தெ; மு - கோடையாண்டவர், முத்துக்குமரன்; பா - அருணகிரிநாதர்; பதி - ஆதிமுதனாளி லென்றன் எனத்தொடங்கும் 7 திருப்புகழ் பாடல்கள் (713 - 719); சிறப்பு - ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது, தீராத நோய் தீர்க்கும் தலம், மூலவர் பெரியது;

20. திருப்போரூர் - 603110; வேபெ - சமரமாபுரி, யுத்தபுரி, போரி, போரிமாகர்; வழி - சென்னை மகாபலிபுரம் சாலையில் 42 கி.மீ.; பா - அருணகிரிநாதர்; பதி - அனுத்தே னேர் மொழியாலே எனத் தொடங்கும் 4 திருப்புகழ் பாடல்கள் (720 - 723); சிறப்பு - சிதம்பரசுவாமிகள் வாழ்ந்தது, முருகன் அசுரரை எதிர்த்து விண்ணில் போர் புரிந்தது.

21. உத்திரமேரூர் - 603406; வழி - செங்கற்பட்டிலிருந்து 30 கி.மீ.; இ - சிவபெருமான்; அ - உமையம்மை; மு - ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி, ஆயிரம் கலை கர்த்தர்; பா - அருணகிரிநாதர்; பதி - சுருதி மறைகளிரு நாலு திசை எனத்தொடங்கும் 4 பாடல்கள் (724 - 727); சிறப்பு - சுந்தர வரதராஜ பெருமாள் சந்நதி அற்புதமானது.

22. மதுராந்தகம் - 603366; வழி - பஸ் நிலைய அருகில் வயல் மேட்டில் உள்ளது; இ - பாண்டீஸ்வரம்; மு - ஆறுமுக சுவாமி; பா -அருணகிரிநாதர்; பதி - மனைமாண சுதரான என்ற ஒரு திருப்புகழ் பாடல் (730);

23. வளவாபுரி - 603302; வேபெ - சேயூர், செய்யூர், செய்கை, செங்கையமபதி; வழி - மதுராந்தகத்திலிருந்து 26 கி.மீ./கி; இ - கைலாசநாதர்; அ - சிவாநந்தவல்லி; மு - சேயூர் முருகன், செய்கை கந்தன்; பா - அருணகிரிநாதர்; பதி - முகிலாமெனும்வார் குழலார் சிலை எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (731); சிறப்பு - தனிப்பாடல்கள் உள;

24. பேறைநகர்- 603310; வேபெ - பெரும்பேறு; வழி - விழுப்புரம் செங்கற்பட்டு பாதையில் தொழுப்பேடுக்கருகில்; இ - தான் தோன்றீஸ்வரர்; அ - எல்லையம்மன்; மு - கந்தவேள்; பா - அருணகிரிநாதர்; பதி - நீலமயில் சேருமந்தி மாலை எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (732);

25. விசுவை - 603403; வேபெ - விசூர்; வழி - உத்திரமேரூரிலிருந்து 11 கி.மீ.ல் மானாம்பதியிலிருந்து 1 கி.மீ.; இ - அகஸ்தீஸ்வரர்; அ - அகிலாண்டேஸ்வரி; மு - சுப்ரமணியர்; பா - அருணகிருநாதர்; பதி - திருகு செறிந்த குழலை வகிர்ந்து என ஒரு திருப்புகழ் பாடல் (1001); சிறப்பு - அம்பிகை விசுவரூபம் எடுத்தது;

26. வடதிருச்சிற்றம்பலம் - 603308; வேபெ - புலிப்பரப்பக்கோவில்; வழி - மதுராந்தகத்திலிருந்து படாளம் சென்று அருகில் 2 கி.மீ.; இ - வியாக்கிரபுரீசுவரர், ஹேமசபேசர்; அ - பாலகுசாம்பாள்; மு - வடதிருச்சிற்றம்பலப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - குதிபாய்ந்து எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (726, 729); சிறப்பு - கல்வெட்டுக்கள் உள்ளன;

மேலூர் மாவட்டம் - 9

27. வள்ளிமலை - 632520; வழி - காட்பாடியிலிருந்து 11 கி.மீ., திருவலத்திலிருந்து 14 கி.மீ; இ - காசிவிச்வநாதர்; அ - விசாலாக்ஷி; மு - ஞானபண்டிதன், பிரம்ம சாஸ்த்தா; பா - அருணகிரிநாதர்; பதி - அல்லிவிழி யாலுமுல்லை என்று தொடங்கும் திருப்புகழ் பாடல்கள் (312-322); சிறப்பு - குடவறைக்கோயில், வள்ளியை முருகன் மணந்தது.

28. ஞானமலை - 632505; வேபெ - கோவிந்தச்சேரி; வழி - காவிரிப்பாக்கத்திலிருந்து சோளிங்கர் வழியில் 14 கி.மீ.; இ - ஞானகிரீஸ்வரர்; மு - ஞான சொரூபன், ஞானபண்டிதன், பிரம்மசாஸ்தா; பா - அருணகிரிநாதர்; பதி - சூதுகொலை எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (399, 400); சிறப்பு - முருகன் பாதசுவடுகள் படிந்த இடம்.

29. திருவலம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - நசையோடு தோலும் தசை எனத்தொடங்கும் திருப்புகழ் பாடல் (675);

30. விரிஞ்சிபுரம் - 632104; வேபெ - பிரம்மபுரம், கௌரிபுரம்; வழி - வேலூரிலிருந்து 10 கி.மீ.; இ - வழித்துணைநாதர், மார்க்கபந்து; அ - மரகதவல்லி; மு - முருகன்; பா - அருணகிரிநாதர்; பதி - நிகரில் பஞ்சபூதமும் சிறுமனைச்சயன எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (680, 682); சிறப்பு - முருகன் சன்னதி இரண்டு உள;

31. வேப்பூர் - 632503; வேபெ - ஷபிரணியம்; வழி - ஆற்காட்டிலிருந்து 1 கி.மீ.; இ - வசிஷ்டேஷ்வரர்; அ - பாலகுசாம்பாள்; மு - முருகவேள்; பா - அருணகிரிநாதர்; பதி - குரைகடலுலகினி லுயிர் கொடு வோந்து என்ற திருப்புகழ் பாடல் (763); சிறப்பு - வசிஷ்டர் வழிபட்டது, ஆறு முனிவர்கள் ஆஸ்ரமம் அமைத்ததால் ஆற்காடு;

32. குறட்டி - 636611; வேபெ - கொரட்டி; வழி - திருப்பத்தூரிலிருந்து ஊத்தங்கரை வழியில் 8 கி.மீ.; இ - காளத்தீசுவரர்; அ - ஞானப்பூங்கோதை; மு - ஆறுமுகப்பெருமாள்; பா - அருணகிரிநாதர்; பதி - கூரிய கடைக்கணாலு மேருநிக எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (903, 904); சிறப்பு - அலர்மேல் மங்கையுடன் கூடிய பிரசன்ன வெங்கடேசன் கோயிலும் உள்ளது;

33. ஒடுக்கத்துச் செறிவாய் - 632103; வேபெ - ஒடுக்கத்தூர்; வழி - வேலூர் மாவட்டத்தில் முக்கிய ஊர்; இ - சப்த ரிஷீஸ்வரர்; அ - அம்பிகை; மு - சுப்ரமணியர்; பா - அருணகிரிநாதர்; பதி - வகுக்குச் சொற்பயிற்வாற் என்ற ஒரு திருப்புகழ் பாடல் (997) உள்ளது; சிறப்பு - முருகனது கவித்திறனை பாராட்டி நாற்கவிராஜன் என்று பாராட்டுகிறார்.

34. முள்வாய்; வேபெ - முள்வாய் பாளையம்; வழி - அரக்கோணம் அருகில் உள்ள கோணத்திலிருந்து 5 கி.மீ.; மு - சுப்ரமணியர்; பா - அருணகிரிநாதர்; பதி - 'மின்னார் பயந்த மனிதர்' எனத் தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (999); சிறப்பு - பாளையக்காரர்கள் ஆண்டது.

35. கரபுரம் - 632104; வேபெ - திருப்பாற்கடல்; வழி - காவேரிப்பாக்கத்திலிருந்து 1 கி.மீ.; இ - கரபுரீசர்; அ - அபீதகுசாம்பாள்; மு - ஆறுமுகம்; பா - அருணகிரிநாதர்; பதி - 'பரவியுனது' என்று தொடங்கிய 3 திருப்புகழ் பாடல்கள் (678, 679, 681); சிறப்பு - இரு சிவன் கோயில்கள் இரு திருமால் கோயில்கள் உள்ளன, சிவன் கோயில் வைணவ கோயில் ஆனது (தூஷணேசர்);

திருவண்ணாமலை மாவட்டம் - 4

36. கனககிரி - 606902; வேபெ - கனகமலை, கனகாசலம், தேவியம்பதி, தேவிகாபுரம், தேவகிபுரம், நாராயணவனம்; வழி - ஆரணிக்கு 15 கி.மீ./ தெ; இ - விசுவநாதர், திருக்காமேஸ்வரர்; அ - பெரிய நாயகி,

கோகிலாம்பாள்; மு - ஆறுமுககசுவாமி; பா - அருணகிரிநாதர்; பதி - 'அரிவையர்கள் தொடருமின்லத்' என்று தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (408); சிறப்பு - விசுவநாதருக்கு வெந்நீர் அபிஷேகம்.

37. திருவண்ணாமலை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'இரவு, பகல் பலகாலும்' என்று தொடங்கும் 79 திருப்புகழ் பாடல்கள்.

38. திருவோத்தூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'தவர் வாட்டோமர சூலிந் தரியாக்' கென தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (687).

39. காமத்தூர் - 632316; வேபெ - காமக்கூர்; வழி - ஆரணியிலிருந்து 6 கி.மீ. பாளையம் வந்த பின்பு 1 கி.மீ.; இ - சந்திரசேகர சுவாமி; அ - காமாட்சியம்பிகை; மு - ஆறுமுக அழகன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஆகத் தேததப் பாமற் சேரி' என தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (998); சிறப்பு - மூன்று கருங்கல் குண்டுகள்;

விழுப்புரம் மாவட்டம் - 9

40. மயிலம் - 604304; வேபெ - மயூராசலம்; வழி - விழுப்புரத்திலிருந்து 29 கி.மீ.; இ - விசுவநாதர்; மு - சுப்ரமணியர்; பா - அருணகிரிநாதர்; பதி - 'கொலை கொண்ட போர் வழ' என ஒரு திருப்புகழ் (327); சிறப்பு - பொம்மைய பாளையம் ஆதீனம் பராமரிப்பது; த - புன்னை; தீ - வராகநதி, தனிப்பாடல்கள் பல உள.

41. பாக்கம் - 606402; வழி - திருவண்ணாமலை கள்ளக்குறிச்சி வழியில் கருவனூர் அருகில் 4 கி.மீ./கி; இ - சோளீஸ்வரர்; அ - சுகந்த குந்தளாம்பிகை; மு - ஆறுமுகசாமி; பா - அருணகிரிநாதர்; பதி - 'கார்க்கோத்த மேனி கடல்' எனத் தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள்; சிறப்பு - பங்குனி பூசத்தில் பிரார்த்தனைகள் சிறப்பானவை;

42. திருவக்கரை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'கலகாலனச்சில கலைகள் பிதற்றுவ' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (733,734);

43. திருவாமாத்தூர்; தேவாத; பா - அருணகிரி நாதர்; பதி - அடல்வளி வேல்கள் வாளிக எனத்தொடங்கும் 4 திருப்புகழ் பாடல்கள் (739 - 742);

44. திருக்கோவலூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'பாவ நாரிகள் மாமட மாதர்' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (744).

45. தேவனூர் - 604208; வழி - செஞ்சியிலிருந்து சேத்துப்பட்டு பாதையில் 13 கி.மீ.; இ - நாகேஸ்வரன்; அ - கமலேஸ்வரி; மு - முருகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஆறுமாறு மஞ்சு மஞ்சும்' எனத்தொடங்கும் 3

திருப்புகழ் பாடல்கள் (745, 746, 747); சிறப்பு - பழனி முருகன் போன்ற அமைப்பு;

46. திருத்துறையூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஆரத்தன பாரத்துகில் முடிப்பவர்' எனத்தொடங்கும் இரு திருப்புகழ் பாடல்கள் (752,1318);

47. திருநாவலூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'கோல மறையொத்த மாலை தனி' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (753);

48. திருவெண்ணெய்நல்லூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - பல பல தத்துவமதனை யெரித்தருள் எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (754);

கடலூர் மாவட்டம் - 15

49. சிதம்பரம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'எழுகடல் மணலை அளவிழ' எனத்தொடங்கும் 67 திருப்புகழ் பாடல்கள் (596660, 1317);

50. திருவதிகை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'பரவுவரிக் கயல்குவியக் குயில்' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (748, 749);

51. திருவாமூர் - 607106; வழி - பண்ருட்டியிலிருந்து 10 கி.மீ.; இ - பசுபதீஸ்வரர்; மு - கந்தேவேள்; பா - அருணகிரிநாதர்; பதி - சிதமதிய மெறிக்குற் தழலாலே' எனத்தொங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (750); சிறப்பு - திலகவதியார் வாழ்ந்து அப்பரை சைவத்திற்கு திருப்பியது;

52. திருப்பாதிரிப்புலியூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'நிணமொரு குருதி நம்பு மாறிய' என்ற திருப்புகழ் பாடல் (755);

53. திருமாணிகுழி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'மதிக்கு தேரெனும் வாண்முகம்' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (756);

54. திருவேட்களம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'சதுரத்தரை தோக்கிய பூவொடு' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (757,758);

55. திருநெல்வாயில்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'அறிவிலாதவ ரீனர் பேச்சிரண்டு' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (759);

56. விருத்தாசலம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'குடத்தாமரை யாமென வேயிரு' எனத்தொடங்கும் 3 திருப்புகழ் பாடல்கள் (760 - 762);

57. வேப்பஞ்சந்தி - 606304; வேபெ - வேப்பூர்; வழி - உளூந்தூர் பேட்டைக்கு 24 கி.மீ./தெ; இ - வில்வவனேசர்; மு - ஞானஸ்கந்த மூர்த்தி; பா - அருணகிரிநாதர்; பதி - 'நாட்டந் தங்கிக் கொங்கை' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (765);

58. திருக்கூடலையாற்றூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'வாட்டி யெனைச் சூழ்ந்த வினை' எனத் தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (766);

59. கடம்பூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - வாருமிங்கேவீடி தோபணம் என்னும் ஒரு திருப்புகழ் பாடல் உள்ளது (767);

60. திருவரத்துறை - 60611; வேபெ - திருவட்டத்துறை, நிவாதிபுரம்; வழி - பெண்ணாகடத்திலிருந்து 8 கி.மீ./தெ; இ - தீர்த்தபுரீசர், அரத்துறைநாதர்; அ - ஆனந்த நாயகி, திரிபுர சுந்தரி; மு - முருகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'கறுவி மைக்கணிட் டினித' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (768); சிறப்பு - சம்பந்தருக்கு முத்துச் சிவிகையும், குடையும் சின்னமும் கொடுத்தது;

61. யாழ்ப்பாணயன் பட்டினம் - 608703; வேபெ - எருக்கத்தம்புலியூர், இராசேந்திர பட்டிணம்; வழி - விருத்தாசலத்திலிருந்து 11 கி.மீ./தெ.; இ - ஸ்வேதார்க்கவனேசுவரர்; நீலகண்டேசுவரர்; அ - அபின்ன குசாம்பிகை, நீலமலர்க்கண்ணி; மு - முருகன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'பூத்தார் சூடும் கொடுத்தவர்' என்றும் ஒரு திருப்புகழ் பாடல் (769);

62. திருமுட்டம் - 608703; வேபெ - ஜில்லிகாவளம், ஸ்ரீ முஷ்ணம்; வழி - சிதம்பரம் கடலூர் பாதையில் 35 கி.மீ.; இ - நித்திலேசுவரர்; அ - பெரியநாயகி; மு - திருமால் முருகன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'கழைமுத்து மாலை புயல் முத்து மாலை' என்று தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (770, 771); சிறப்பு- ஆதிவராக பெருமாள் சந்நதி சிறப்பு;

63. அத்திப்பட்டு - 607803; வேபெ - வில்லுடையான் பட்டி, நெய்வேலி; வழி - வடலூருக்கு 6 கி.மீ./வ; இ - விசுவநாதர்; அ - விசாலாட்சி; மு - முருகன், வில்லுடையான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'கருகியறு வகலவுயிர் விட்டு' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (905); சிறப்பு - முருகன் வில்லும் அம்பும் ஏந்திய திருக்கோலம்;

சேலம் வாட்டம் - 1

64. சேலம் - 635001; வேபெ - நாகேசம் பாபநாசம், பட்பீச்சரம்; வழி - சேலம் நடுவில் உள்ளது; இ - சுகவனேஸ்வரர்; அ - சுவர்ணாம்பிகை; மு - சுகவன சுப்ரமணியர்; பா - அருணகிரிநாதர்; பதி - 'பரிவுறு நாரற் றழல்

மதி வீச' என்ற திருப்புகழ் பாடல் (944) உள்ளது; சிறப்பு - சுகமுனிவர் கிளி உருவில் இறைவனை வழிபட்டது

நாமக்கல் மாவட்டம் - 3

65. திருச்செங்கோடு; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'அன்பாக வந்து உன்னுன்' எனத்தொடங்கும் 21 திருப்புகழ் பாடல்கள் (375 - 395); மு - செங்கோட்டு வேலவன், செங்கோடன்;

66. கொல்லிமலை - 621011; வழி - நாமக்கல்லிலிருந்து 25 கி.மீ./தெ.; இ - அறப்பளீசுரர்; அ - தாயம்மாள்; மு- ஆறுமுகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'கட்டமன்னு மன்னல் கொட்டி' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (396, 397); சிறப்பு - மீன்களுக்கு மூக்கு குத்தி விடுவது சந்நதி பெற;

67. ராசிபுரம் - 637408; வேபெ - ராஜபுரம்; வழி - நாமக்கல்லில் இருந்து 25 கி.மீ.; இ - கயிலாசநாதர்; அ - தர்மசவர்த்தினி; த - வில்வம்; மு - ஆறுமுகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'சங்குவார் முடி பொற்கழல்' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (945); சிறப்பு - வல்வில் ஓரி திருப்பணி செய்தது, ஆண்மக்கட் பேறு வேண்டி பிரார்த்தனை செய்வது;

தர்மபுரி மாவட்டம் - 1

68. தீர்த்தமலை - 639606; வேபெ - தவராஜகிரி, பஞ்சபூதகிரி; வழி - தர்மபுரி ஆரூர் பாதையில் உள்ளது; இ - தீர்த்த கிரீசுவரர்; அ - வடிவழகியம்மை; மு - பாலமுருகன் தீர்த்தமலை காத்த கந்தன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'பாட்டிலிருகிலை கேட்டு முருகிலை' என்ற திருப்புகழ் பாடல் (407); சிறப்பு - ஐந்து சுனைகள் உள. கல்வெட்டுக்கள் உண்டு;

கோயம்புத்தூர் மாவட்டம் - 6

69. குருடிமலை - 641 108; வேபெ - சின்ன தடாகம், குருமாஷமலை; வழி - கோவை அருகில் உள்ளது; மு - செவ்வகக்கல் முருகனாக வழிபடப்படுகிறது; பா - அருணகிரிநாதர்; பதி - 'கருடன் மிசை வருகரிய' என்ற திருப்புகழ் பாடல் உள்ளது (403); சிறப்பு - முருகன் கோயில் திருமால் கோயிலாகி ரங்கநாதசுவாமி கோயில் ஆகிவிட்டது.

70. தென்சேரிகிரி - 638662; வேபெ - மலைப்பாளையம்; வழி - பல்லடத்திலிருந்து 6 கி.மீ./தெ.மே; இ - கயிலாயநாதர்; அ - பிரகன் நாயகி; மு - சண்முகதேவர், வேலாயுதசாமி, மந்திரசலமூர்த்தி; பா -

அருணகிரிநாதர்; பதி - 'எங்கேனுமொருவர் வர' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (404, 405); சிறப்பு - பூக்கேட்டல் முக்கியம்; தீ - சயிலோதகம்;

71. திருமுருகன் பூண்டி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'அவசிய முன் வேண்டிப் பலகாலும்' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (952); மு - திருமுருக நாதேஸ்வரர்;

72. அவிநாசி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'இறவாமல் பிறவாமல் எனையாள்' என்று தொடங்கும் 6 திருப்புகழ் பாடல்கள் (953-958); சிறப்பு - அவிநாசி கேட்க முக்தி.

73. பேரூர் - 641010; வேபெ - மேலை சிதம்பரம்; வழி - கோவையிலிருந்து 8 கி.மீ./மே; இ - பட்டிப்பெருமான்; அ - பச்சை நாயகி; மு - பாலதண்டாயுதபாணி; பா - அருணகிரிநாதர்; பதி - 'தீராப்பிணி தீர சிவாத்தும ஞான் எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (960, 961); சிறப்பு - சிற்பங்கள் ஒப்பற்றவை, கச்சியப்பர் இயற்றிய பேரூர் புராணம்;

74. மருதமலை - 641063; வேபெ - வடவள்ளி; வழி - கோவைக்கு 12 கி.மீ./வ.மே.; மு - மருதமலை ஆண்டவர்; பா - அருணகிரிநாதர்; பதி - 'திரிபுரமதனை ஒரு நொடியதனில்' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (1187); சிறப்பு - தனிப்பாடல்கள் உள, அமரர் சின்னப்ப தேவரின் திருப்பணி, பிள்ளைவரம் வேண்டுபவர் இரும்பன் கோயிலில் வேண்டுவது;

ஈரோடு மாவட்டம் - 9

75. சென்னிமலை - 638051; வேபெ - சிகரகிரி, சிரகிரி, புட்பகிரி, சென்னியங்கிரி; வழி - ஈரோட்டிலிருந்து 29 கி.மீ./தெ.; இ - கயிலாயநாதர், திருமுக மலர்ந்தநாதர், நடராஜர்; அ - திருந்தார் குழலி, பெரியநாயகி, இமயவல்லி; மு - சென்னிமலை ஆண்டவர், சிரகிரி வேலாயுதர்; பா - அருணகிரிநாதர்; பதி - 'பகலிரவினிற் றடுமாறு' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (348); சிறப்பு - சரவண முனிவர் இயற்றிய சென்னிமலை தலப்புராணம், மேழி விளக்கம், பிள்ளைத்தமிழ், யமக அந்தாதி, கொங்கு மண்டல சதகம், சென்னிமலை ஆண்டவர் காதல், புலவரலாற்றுப்படை, பந்துறைப் புராணம் - படிக்காசுப் புலவர் இயற்றிய வண்ணப் பாக்கள்; தீ - மாமாங்க தீர்த்தம், சரவணப் பொய்கை;

76. ஊதிமலை - 638703; வேபெ - ஊதியூர், கொங்கு கணகிரி, சஞ்சீவிமலை, பொன்னூதி மலை; வழி - காங்கேயம் தாராபுரம் பாதையில் 13 கி.மீ.; மு - உத்தண்ட வேலாயுதசாமி, உத்தண்ட வேலாயுதர், தண்டபாணி; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஆதிமகமாயி யம்பை தேவி' எனத்தொங்கும் இரு திருப்புகழ் பாடல்கள் (401, 402);

77. கொங்கணகிரி - **638701;** வேபெ - வட்டமலை; வழி - காங்கேயம் தாராபுரம் பாதையில் **20** கி.மீ.; மு - முத்துக்குமரன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஐங்கரனை யொத்த மன' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் **(406);** த - மாவிலிங்க மரம்; தீ - மரகத தீர்த்தம், சாயக்ராம தீர்த்தம், கொங்கண தீர்த்தம்; சிறப்பு - அற்புத சிற்பங்கள் நிறைந்தது;

78. கன்னபுரம் - **638 701;** வேபெ - நேத்ரபுரி; வழி - கரூர் கோவை பாதையில் வெள்ளக் கோயில் அருகில்; இ - விக்கிரம சோளீஸ்வரர்; அ - வித்வநாயகி; மு - ஆறுமுகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'அன்னமிசை செந்நளின' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடல் **(821);** சிறப்பு - கன்னபுரம் மாரியம்மன் பிரசித்தம், கன்னபுரம் மாட்டுச்சந்தை சிறப்பானது.

79. கொடுமுடி; தேவாத; பா - அருணகிரிநாதர் பதி - 'இருவினைப் பிறவிக் கடல் மூழ்கி' எனத்தொடங்கும் இரு திருப்புகழ் பாடல்கள் **(942, 943);** மு - கொடுமுடிக்குமரன்; சிறப்பு - மலைக்கொழுந்து கவிராயர் இயற்றிய திருத்தொண்டர் சதகம், கொடுமுடிக்குறவஞ்சி, கொடுமுடிப்பள்ளு;

80. விஜயமங்கலம் - **638056;** வேபெ - விஜயபுரி; வழி - ஈரோடு திருப்பூர் இடையில் உள்ளது; இ - நாகேச பெருமான்; அ - கோவர்த்தனாம்பிகை; மு - முருகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'கலக சம்ப்ரமத் தாலேவி' என்ற ஒரு திருப்புகழ் பாடல் **(946);** சிறப்பு - கூனம்பட்டி மணிவாசகர் திருமடம் அண்மையில் உள்ளது, தாத்ரேயர் சந்நதி முக்கியம்.

81. சிங்கை - **638701;** வேபெ - காங்கேயம்; வழி - ஈரோடு தாராபுரம் பாதையில் உள்ளது; இ - அகஸ்தீஸ்வரர்; அ - அகிலாண்ட நாயகி; மு - கல்யாண சுப்ரமணிய சுவாமி; பா - அருணகிரிநாதர்; பதி - 'சஞ்சரியு கந்து நின்று முரல்' எனத் தொடங்கும் இரு திருப்புகழ் பாடல்கள் **(947, 948);** தீ - கோவிந்த தீர்த்தம்; சிறப்பு - அகத்தியர் வழிபட்டது;

82. பட்டாலியூர் - **638701;** வேபெ - சிவன்மலை; வழி - காங்கயம் திருப்பூர் பாதை; இ - பல்லவனீஸ்வரர், பால் வண்ணநாதர்; அ - நல்லமங்கை; மு - ஆறுமுகப் பெருமான், பட்டாலியூர் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - இருகுழை யிடறி காது மோதுவ எனத் தொடங்கும் **3** திருப்புகழ் பாடல்கள் **(949-951);** தா - தொரட்டி, இலந்தை, புளி; சிறப்பு - அனுமார் மீதுள்ள வெண்ணெய் தீராத நோய் தீர்க்கும், மாய்ந்த வேடர் உயிர் பெற்ற ஊர்;

83. பவானி; தேவாத; பா - அருணகிரி நாதர்; பதி - 'கலைமேவு ஞானப் பிரகாச கடலாடி' என்ற ஒரு திருப்புகழ் பாடல்.

84. சுவாமி மலை - 612302; வேபெ - திருவேரகம், குருகிரி, குருமலை; வழி - கும்பகோணம் அருகில் தஞ்சாவூர் சாலையில்; இ - தாரக பரமேஸ்வரர்; பா - அருணகிரிநாதர்; பதி - 'அவா மரு வினாவக' எனத்தொடங்கும் 38 திருப்புகழ் பாடல்கள் (199 - 236); மு - சுவாமி நாதன், குருபரன், குமரகுருபிரன், ஞானஸ்கந்தன்;

85. திருநல்லூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'மூலமுண்டகறு பூதி மந்திர' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (772);

86. மருத்துவக்குடி - 612101; வழி - ஆடுதுறை அருகில் கும்பகோணத்திலிருந்து 13 கி.மீ./கி.; இ - ஸ்ரீ ஐராவதேஸ்வரர்; அ-அபிராமி; மு - கந்தவேள்; பா - அருணகிரிநாதர்; பதி - 'கருத்தி தப்படு காமாலீலைகள்' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (859); சிறப்பு - யானைக்கு குட்டம் நீங்கியது;

87. திருப்பனந்தாள்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'கொந்தார் மைக்குழலிந்தார்' என்ற திருப்புகழ் பாடல் (867);

88. திருவிடைமருதூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - அறுரு நுனி பணிபனைய' என்று தொடங்கும் 4 திருப்புகழ் பாடல்கள் (868-871);

89. திருபுவனம் - 612103; வழி - கும்பகோணம் மயிலாடுதுறை வழியில் 6 கி.மீ./கி; இ - கம்பஹரேஸ்வரர், நடுக்கம் தீர்த்த நாயகர்; அ - தர்மசம்வர்த்தினி; மு - சுப்ரமணியர்; பா - அருணகிரிநாதர்; பதி - தனுநுதல் வெயர் வெழ' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (872); சிறப்பு - வரகுணபாண்டியன் நடுக்கம் தீர்த்தது;

90. சோமீஸ்வரம்; தேவாத (குடந்தைக் காரோணம்); பா - அருணகிரிநாதர்; பதி - 'கரிய குழல் சரிய முகம்' என்ற திருப்புகழ் பாடல் (873).

91. கும்பகோணம்; தேவாத (குடமூக்கு); பா - அருணகிரிநாதர்; பதி - 'இந்து கதிர் சேரருண' எனத்தொடங்கும் 7 திருப்புகழ் பாடல்கள் (874 - 880);

92. கொட்டையூர்; தேவாத; பா - அருணகிரி நாதர்; பதி - பட்டுமணிக் கச்சிறுகக் கட்டி' என்று தொடங்கும் திருப்புகழ் பாடல் (881);

93. சிவபுரம்; தேவாத; பா - அருணகிரி நாதர்; பதி - 'மனமெனும் பொருள் வானதை' என்ற திருப்புகழ் பாடல் (882);

94. திருநாகேஸ்வரம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஆசார வீனக் குதர்க்க துட்டர்கள்' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (883);

95. திருசத்திமுற்றம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'கடகரிம குப்பிறக தீர்த்து' என்ற திருப்புகழ் பாடல் (885);

96. திருவலஞ்சுழி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'மகர குண்டல மிதே மோதுவ' என்ற திருப்புகழ் பாடல் (886);

97. திருப்பழையாறை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'தோடுற்றுக் காதளவோடிய' என்ற திருப்புகழ் பாடல் (887);

98. திருச்சக்கரப்பள்ளி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - திட்டெனப் பல செப்பை யடிப்பன' என்ற திருப்புகழ் பாடல் (888);

99. வடகுரங்காடுதுறை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'அலங்கார முடிக்கிரண திரண்டானு' என்று தொடங்கும் 3 திருப்புகழ் பாடல்கள் (889 - 891);

100. காவனார் - 614303; வழி - தஞ்சாவூரிலிருந்து திருக்கருகாவூர் செல்லும் வழியில் நரியனூர் இறங்கி 1 கி.மீ./கி.; இ - காசி விசுவநாதர்; அ - விசாலாட்சி; மு - குமாரசாமி; பா - அருணகிரிநாதர்; பதி - 'மானன் நேர்வழி யொத்த' என்ற திருப்புகழ் பாடல் (892); சிறப்பு - மூலவன் விமானம் அறுகோண அமைப்பு, 12 ராசிகள் 12 படிகளாக உள்ளன.

101. தஞ்சாவூர் - 613001; வழி - மாவட்ட தலைநகர்; இ - பிரகதீஸ்வரர், பெருவுடையார்; அ - பெரியநாயகி; மு - ஆறுமுக பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'அம்பு ராசியிற் கெண்டை' எனத்தொடங்கும் மூன்று திருப்புகழ் பாடல்கள் (893 - 895); சிறப்பு - கருவூர்த் தேவர் பாடியுள்ளது, ராஜராஜனின் சாதனை.

102. தில்லைஸ்தானம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - மருவு லாவிடு மோதிகுலைப்பவர்' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (896, 899);

103. திருவையாறு; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'சொரியு மாமுகிலோ இருளோ குழல்' என்ற திருப்புகழ் பாடல் (897);

104. திருப்பூந்துருத்தி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'வீங்கு பச்சிள நீர் போல்' என்ற திருப்புகழ் பாடல் (898);

105. பெரும்புலியூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'சதங்கை மணி வீரச் சிலம்பிளி' என்ற திருப்புகழ் பாடல் (901);

மதுரை மாவட்டம் - 3

106. திருப்பரங்குன்றம் - 625005; வேபெ - கந்தமானம், கந்தமலை, சத்யகிரி, பரங்கிரி; வழி - மதுரைக்கு 8 கி.மீ. ⁄ மே; இ - சத்யகிரீசர், பரங்கிரி நாதர்; அ - ஆவுடைநாயகி; மு - முருகவேள்; பா - அருணகிரிநாதர்; பதி - 'உனைத் தினந்தொழு திலனுன்' எனத் தொடங்கும் 14 திருப்புகழ் பாடல்கள் (7-20); சிறப்பு - தலம் பற்றி 26 நூல்கள் உள, அறுபடை வீடுகளுள் ஒன்று, தெய்வயானையை மணந்தது;

107. பழமுதிர்ச் சோலை - 625 301; வேபெ - அழகர்மலை, இடபகிரி; வழி - மதுரையிலிருந்து 14 கி.மீ. ⁄ தெ; மு - திருமால் முருகன்; இ - நாவல; தீ - திருச்சிலம்பாறு; பா - அருணகிரிநாதர்; பதி - 'வாதினை அடர்ந்த வேல்' எனத்தொடங்கும் 16 திருப்புகழ் பாடல்கள் (439-454); சிறப்பு - மாமன் (திருமால்) தயவில் முருகன் கோயில் வந்தது.

108. மதுரை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'பரவு நெடுங்கதிருலகில் விரும்பிய' எனத்தொடங்கும் 11 திருப்புகழ் பாடல்கள் (967 - 977);

திண்டுக்கல் மாவட்டம் - 3

109. பழநி ⁄ திருவாவினன்குடி - 624601; வேபெ - தென் பழனாபுரி, சித்தன் வாழ்வு, பொதினி; வழி - திண்டுக்கல் அருகில்; இ - ஆடல்வல்லான்; அ - சிவகாம சுந்தரி; மு - பழனி ஆண்டவர், தண்டாயுதபாணி; பா - அருணகிரிநாதர்; பதி - 'நாத விந்து கலா தீ' எனத்தொடங்கும் 98 திருப்புகழ் பாடல்கள (104 - 198, 1315, 1416); சிறப்பு - மலைமீது தண்டபாணி (பழநி), அடிவாரத்தில் குடந்தை வேலாயுதசாமி (திருவாவினங்குடி), தனிப்பாடல்கள் பல உள; அறுபடை வீடுகளுள் ஒன்று.

110. திருவாவினன்குடி - 624601;

111. பூம்பிறை - 624103; வேபெ - பூம்பாறை, பூம்புறை; வழி - கொடைக்கானல் அருகில் உள்ளது; இ - ஸ்ரீ குழந்தை வேலப்பர்; த - மகிழ்; தீ - வித்தனூத்து; பா - அருணகிரிநாதர்; பதி - 'மாந்தளிர்கள் போல வேய்ந்த' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (410); சிறப்பு - நவபாஷாண சிலை, சிறந்த இயற்கை சூழல்.

தேனி மாவட்டம் - 1

112. பெரியகுளம் - 626501; வேபெ - குளந்தை நகர்; வழி - மதுரை தேனி வழியில் உள்ளது; இ - ராஜேந்திர சோழேசுவரர்; அ - அறம் வளர்த்த

நாயகி மு - பாலசுப்ரமணிய சுவாமி; பா - அருணகிரிநாதர்; பதி - 'தாரங்குவார் குழற்றநுதல்' என்ற திருப்புகழ் பாடல் (964); சிறப்பு - பன்றிக்காக பால் கொடுத்தது;

திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 11

113. திருச்சிராப்பள்ளி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'அங்கை நீட்டிய மைத்துப் பாரிய' எனத்தொடங்கும் 15 திருப்புகழ் பாடல்கள் (328-342);

114. திருக்கற்குடி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'குடத்தைத் தகர்த்துக் களிற்றை' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (343, 344);

115. ராஜகம்பீரவள நாட்டுமலை - 620 102; வேபெ - திருக்கற்குடி; வழி - திருச்சி வயலூர் சாலை; இ - உச்சிநாதர்; அ - அஞ்சனாட்சி; மு - சண்முகநாதர்; பா - அருணகிரிநாதர்; பதி - 'மாகசஞ்சார முகில் தோற்ற' என்ற திருப்புகழ் பாடல் (398); சிறப்பு - குழந்தைகளுக்கு முடி கயிறு;

116. திருவானைக்கா; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'நாடித்தேடி தொழுவார்பால்' என்று துவங்கும் 14 திருப்புகழ் பாடல்கள் (501-514);

117. பெருங்குடி - 620102; வழி - திருச்சியிலிருந்து வயலூர் பாதையில் சோமரசம்பேட்டை வந்து பின் 2 கி.மீ.; இ - அகஸ்தீஸ்வரமுடையார்; அ - சிவகாமசுந்தரி; மு - பெருங்குடி மருங்குறை பெருமாள்; பா - அருணகிரிநாதர்; பதி - 'தலங்களில் வருங்கள இலங்கொடு' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (710); வரலாற்று சிறப்பு மிக்கது;

118. திருநெடுங்களம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - பஞ்சபுலனும் பழையரண்டு வினை' என்ற திருப்புகழ் பாடல் (902);

119. திருமாந்துறை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஆங்குடல் வளைந்து நீங்குபல்' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (909);

120. வயலூர் - 620102; வேபெ - செய்ப்பதி, குமார வயலூர் வயற்பதி; வழி - திருச்சிக்கு 11 கி.மீ./மே; இ - ஆதிநாதர், அக்னீஸ்வரர், குமாரபூஜித நாதர், விடங்கப் பெருமான், மகாதேவர், திருவக்கீசர், சுந்தர தாண்டவமூர்த்தி, ஐநூற்றுவன்; அ - ஆதிநாயகி, முந்நிலை நாயகி; மு - குமாரவயலூர் குமரன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'என்னால் பிறக்கவும் என்னால்' எனத்தொடங்கும் 8 திருப்புகழ் பாடல்கள் (910-927); த - வள்ளி; தீ - அக்கினி தீர்த்தம், சர்ப்பநதி; சிறப்பு - வாரியார் சுவாமிகளை பெருமான் ஆட்கொண்டது;

121. திருத்தவத்துறை - 621601; வேபெ - லால்குடி; வழி - திருச்சி அரியலூர் பாதையில் 19 கி.மீ./வ.கி.; இ - சப்தரிஷீஸ்வரர், தேஜோ விடங்கர்; அ - பெருந்திருப் பிராட்டியார்; மு - ஆறுமுகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'காரணி யுங்குழ லைக்கு வித்திடு' எனத்தொடங்கும் 2 பாடல்கள் (928, 929); தீ - சிவகங்கை; த - அரச; சிறப்பு - மழவ மன்னன் தொழுநோய் நீங்கியது.

122. பூவாளூர் - 621712; வேபெ - மன்மதபுரம்; வழி - லால்குடி அரியலூர் சாலையில் 3 கி.மீ./வ; இ - திருமூலநாதர்; அ - குங்குமாம்பிகை; மு - ஆறுமுக பெருமான், பாலதண்டாயுதபாணி; பா - அருணகிரிநாதர்; பதி - காலன் வேற்கணை யிர் வா ளாலமு' எனத் தொடங்கும் திருப்புகழ் பாடல் (930); சிறப்பு - காமதகனத்திற்குப்பின் மன்மதன் உயிர் பெற்றது, பிதிர்களுக்கு தர்ப்பணம் செய்வது;

123. திருப்பராய்த்துறை; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'வாசனை மங்கையர் போற்று சிற்றடி' என்ற திருப்புகழ் பாடல் (931);

பெரம்பலூர் மாவட்டம் - 2

124. திருப்பழுவூர்; தேவாத; ப - அருணகிரிநாதர் பதி - 'விகடச் சங்கடவார்த்தை' என்னும் திருப்புகழ் பாடல் (900);

125. வாலிகண்டபுரம் - 621115; வேபெ - வாலி கொண்டபுரம்; வழி - பெரம்பலூர் சென்னை சாலையில் 13 கி.மீ.; இ - பிரம்மபுரீசுவரர்; அ - பாலாம்பிகை, பிரகன்நாயகி; மு - பால தண்டாயுதபாணி; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஈயெறும்பு நரி நாய் கணங்கழுகு' என்ற திருப்புகழ் பாடல் (908); சிறப்பு - வாலி பூசித்தது, வரலாறு மிக்கது.

126. இரத்தினகிரி; தேவாத (திருவாட்போக்கி); பா - அருணகிரிநாதர்; பதி - 'கயலை சருவிப் பிணையொத்தவர்' எனத்தொடங்கும் 3 திருப்புகழ் பாடல்கள் (345-347);

127. புகழிமலை - 639113; வேபெ - புகளூர், ஆறுநாட்டார் மலை; வழி - புகளூரிலிருந்து 3 கி.மீ./வ; இ - சுந்தரேசுவரர்; அ - மீனாட்சி; மு - சுவாமிநாதன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'மருவுமலர் வாச முறுகுழலி' எனத்தொடங்கும் திருப்புகழ் பாடல் (409); சிறப்பு - இயற்கையான சுனைகள், கல்வெட்டுகள் உள.

128. தென்கடம்பந்துறை; தேவாத; பா - அருணகிரிஈநாதர்; பதி - 'புணரியும னங்கனம் புஞ்சுரும்' என்ற திருப்புகழ் பாடல் (932);

129. கருவூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'மதியால் வித்தகளாகிய மனதாலு' எனத்தொடங்கும் 7 திருப்புகழ் பாடல்கள் (933-939);

130. நெருவூர் - 639051; வேபெ - நெரூர், நெருவை; வழி - கரூருக்கு அருகில் உள்ளது; இ - அக்னீஸ்வரர்; அ - அம்பிகை; மு - ஆறுமுகப் பெருமான்; பா - அருணகிரிநாதர்; பதி - 'குருவு மடியவ ரடியவ ரடினம்' எனத்தொடங்கும் ஒரு திருப்புகழ் பாடல் (940); சிறப்பு - சதாசிவ பிரம்மேந்திரர் சமாதி உள்ளது;

131. திருவெஞ்சமாகூடல் - 630109; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'வண்டுபோல் சாரத்தருண் தேடி' என்ற திருப்புகழ் பாடல் (941);

புதுக்கோட்டை மாவட்டம் - 3

132. விராலிமலை - 621316; வழி - திருச்சி மதுரை பாதையில் 23 கி.மீ.; இ - மீனாட்சி சுந்தரேசர்; அ - மீனாட்சி; மு - சண்முகநாதன்; பா - அருணகிரிநாதர்; பதி - 'சீரான கோலகால நவமணி' எனத்தொடங்கும் 16 திருப்புகழ் பாடல்கள் (349-364); சிறப்பு - சோலைகளும், மயில்களும் நிறைந்தது.

133. திருப்பெருந்துறை; திவாத; பா-அருணகிரிநாதர்; பதி-'இரத்த முஞ்சியு மூளை எலும்பும்' எனத்தொடங்கும் 3 திருப்புகழ் பாடல்கள் (853-855);

134. திருப்புனவாயில்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'உரையும் சென்றது நாவும் உலர்ந்தது' என்ற திருப்புகழ் பாடல் (1314);

நாகப்பட்டினம் மாவட்டம் - 21

135. திருமயேந்திரம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'வண்டணி யுங்கமழ் கூந்தலார் விழி' எனத்தொடங்கும் திருப்புகழ் பாடல் (773);

136. சீர்காழி; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'சந்தனம் பரிமள புழுகொடு புனை' எனத் தொடங்கும் 14 திருப்புகழ் பாடல்கள் (774-787).

137. கரியவனநகர் - 609116; வேபெ - கொண்டல், கரியவனகிரி, கீழ்பழனி; வழி - சீர்காழிக்கு 6 கி.மீ./மே; இ - தாரக பரமேஸ்வரர்; மு - குமார சுப்ரமணிய சுவாமி, தண்டபாணி; த - பலா; தீ - கழுமலநதி; பா - அருணகிரிநாதர்; பதி - 'அனி சுழலனகக் காடு காட்ட' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (788); சிறப்பு - பிரம்மனை முருகன் சிறை வைத்தது, திருமால் வேண்டியது.

138. புள்ளிருக்கு வேளூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'உரத்துறை போதத் தனியான' எனத்தொடங்கும் 6 திருப்புகழ் பாடல்கள் (789-794);

139. திருக்கடவூர்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஏட்டின் விதிப்படியே கொடுமாபுர' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (795, 796);

140. திருப்படிக்கரை; தேவாத (மண்ணிப் படிக்கரை); பா - அருணகிரிநாதர்; பதி - 'அடுக்கி எமத்தென சிரித்து' என்ற ஒரு திருப்புகழ் பாடல் (797);

141. சிகண்டியூர் (மாயூரம்); தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'அமுதினை மெத்தச் சொரிந்து' என்ற திருப்புகழ் பாடல் (798);

142. திருவிடைக்கழி; ஒன்பதாவது திருமுறை தலம்; பா - அருணகிரிநாதர்; பதி - 'மருக்குலாவிய மலரணை' என்னும் எட்டு திருப்புகழ் பாடல்கள் (799-806);

143. தான்தோன்றி (ஆக்கூர்); தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'சூழ்ந்தேன்ற துக்கவினை' என்ற திருப்புகழ் பாடல் (810);

144. வழுவூர் - 609401; வேபெ - வழுவை, சயுதபுரி, பரகயிலாயம், ஞானபூமி, வழகூர், பிப்பிலாரண்யம்; வழி - மயிலாடுதுறை திருவாரூர் பாதையில் நெய்க்குப்பை அருகில்; இ - கஜசம்ஹார மூர்த்தி, யானை யுரித்த பிரான், கீர்த்தி வாகேஸ்வரர்; அ - இளங்கிளை நாயகி; மு - கந்தன்; த - வன்னி; தீ - சத்தியஜோதக, வாமதேவ, தற்புருட, அகோர, ஈசான, முகமோசன, வித்யா திரிவர்க்கம், ஞானாம்புதம்; பா - அருணகிரிநாதர்; பதி - 'தருவூரிசை யாரமுதார் நிகர்' என்று தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (819, 820); சிறப்பு - கஜாசுரனை வதைத்தது; வடமொழி நூல்கள் சில உள, அருணகிரிநாதருக்கு திருவடி தீட்சை; அட்டவீரட்ட தலங்களுள் ஒன்று.

145. சிக்கல்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'கன்னலொத்த மொழிச்சொல்' எனத்தொடங்கும் 2 திருப்புகழ் பாடல்கள் (836, 837);

146. நாகப்பட்டினம்; தேவாத; பா - அருணகிரிநாதர்; பதி - 'ஓலமிட்டிரைத் தெழுந்த வேலைவட்ட' என்று தொடங்கும் 3 திருப்புகழ் பாடல்கள் (838, 839, 840);

